# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 6
செய்தி 12
மே 2021
விலை ரூ 10/-



# மே தின விழா நிகழ்வுகள்



சிஐடியு
தமிழ் மாநிலக்குழு அலுவலகத்தில்



கோவை
மேற்பொறியாளர் அலுவலகம் முன்பு



திருவண்ணாமலை
மேற்பொறியாளர் அலுவலகம் முன்பு



பெரம்பலூர்
மின்பொறியாளர் அலுவலகம் முன்பு



செய்யார்
பிரிவு அலுவலகம் முன்பு

2

# மின்கதிர்
செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**
**மே 2021**


**உள்ளே....**


- ★ நிகழ்ந்தது ஆட்சிமாற்றம் தலைக்கட்டும் தமிழகம்
- ★ புதிய இந்தியாவை படைக்க ஒன்றுசேர்வோம்
- ★ கோவிட் 19ன் இரண்டாம் அலை
- ★ சட்டங்களையும் நீதிமன்ற தீர்ப்பையும் மதிக்குமா தமிழக மின்வாரியம்
- ★ பொதுத்துறைகளை பாதுகாக்க மக்களிடம் உரையாடுவோம்
- ★ மின்தொடரமைப்பு கழகத்தை தனியாக செயல்படுத்த வாரிய நிர்வாகம் முயற்சி
- ★ கேங்மேன் பணியாளர்கள் சொந்த ஊருக்கு செல்ல வாரிய உத்திரவை மாற்றிடுவோம்.
- ★ திரை உலகில் ஒரு நட்சத்திரம் உதிர்ந்தது
- ★ கொரோனா நோயாளிக்கு ஏன் ஆக்சிஜன் தேவை ?



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**

**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.


# நிகழ்ந்தது ஆட்சி மாற்றம் தலைக்கட்டும் தமிழகம்!

தமிழக சட்டமன்ற தேர்தல் கடந்த ஏப்ரல் 6-ல் நடைபெற்றது. மே 2-ந்தேதி வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. துவக்கத்திலேயே திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அமோக வெற்றி பெறும் வகையில் வெற்றி செய்திகள் வந்தன. 10 ஆண்டுகால அதிமுக ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

இந்த தேர்தலில் திமுக அணியில் போட்டியிட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ், மதிமுக, விசிக உள்ளிட்ட கட்சிளும் கனிசமான இடங்களை பெற்றுள்ளனர். இடதுசாரிகள் தலா 2 இடங்கள் வீதம் 4 இடங்கள் வெற்றி பெற்றுள்ளனர். தொழிலாளி வர்க்கத்தின் குரல் தமிழக சட்டமன்றத்தில் ஒலிக்கும். வாக்களித்த தமிழக மக்களுக்கு நன்றிகளும் பாராட்டுகளும்.

கேரளாவில் 40 ஆண்டுகால அரசியல் நிகழ்வில், ஆட்சியில் இருந்த கட்சிகள் மாறி மாறி ஆட்சி அமைக்கும். ஆனால் இந்த முறை தோழர் பினராய் விஜயன் தலைமையிலான இடது முன்னணி அரசு 2-ம் முறையாக ஆட்சி அமைத்து வரலாற்று சாதனையை படைத்துள்ளது.

கேரள அரசின் கடந்த 5 ஆண்டு கால மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள், கொரானா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள், மக்கள் மனதில் நம்பிக்கையை விதைத்துள்ளது. கேரள மக்களுக்கு மத்திய அமைப்பின் வாழ்த்துக்கள். அசாமிலும்,வங்கத்திலும், புதுச்சேரியிலும் மாற்றங்கள் கவனிக்கப்பட வேண்டியவை. நாம் கற்றுணர்ந்து முன்னேற வேண்டும்.

தமிழகத்தில் அமையப்போகும் புதிய திமுக அரசிற்கு கடுமையான சவால்கள் காத்திருக்கிறது.

கொடிய கொரோனா நோய் தொற்று 2வது அலையில் தமிழகத்தில் உழைப்பாளி மக்கள் மிகுந்த அச்சத்தில் உள்ளனர். நோய் தொற்று வேகமாக பரவி வருகிறது. மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாய் மாறியிருக்கிறது. தமிழக அரசின் அனைத்து துறைகளிலும் லஞ்ச லாவண்யங்கள் தலைவிரித்து கடந்த காலங்களில் ஆடியது. சாமான்ய மக்களின் சலுகைகளை பெற அலைய வைத்த கடந்த ஆட்சியாளர்கள். இந்த

விஷயங்களை கவனத்தில் கொண்டு புதிய அரசு செயல்படும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

மின்சார துறை சேவைத்துறையாக இருக்க, மின்சார சட்ட திருத்த மசோதா 2021-ஐ தடுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநில அரசின் பொதுப்பட்டியலில் மின்சாரம் உள்ளதை பாதுகாக்க வேண்டும். தமிழகத்தின் மின் உற்பத்தி திட்டங்களில் நடைபெற்று வரும் பணிகளை போர்கால அடிப்படையில் துரிதப்படுத்தி மின் உற்பத்தி செய்திட வேண்டும். நீண்டகால மின்சார கொள்முதல் செய்வது சம்மந்தமான ஒப்பந்தங்களை ரத்து செய்ய வேண்டும்.

சமீபத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் ரத்து செய்ய உத்திரவிடப்பட்டுள்ள உப்பூர் மற்றும் எண்ணூர் விரிவாக்க திட்டங்களின், உத்திரவை ரத்து செய்து, மின் உற்பத்தியை உப்பூர் மற்றும் எண்ணூரில் துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே போல போக்குவரத்து ஊழியர்களின், ஓய்வூதியம், பென்சன், ஊதிய உயர்வு, அரசு ஊழியர், ஆசிரியர்களின் பறிக்கப்பட்ட சலுகைகள் கிடைத்திடும் என எல்லோரின் எதிர்பார்ப்புகள் புதியதாக அமையும் திமுக அரசிடம் இருக்கிறது.

தொழிலாளர்களின் நலன்களையும், அவர்களின் உரிமைகளை திமுக அரசு நிறைவேற்றும் என நம்புவோம்! காத்திருப்போம்!

# உப்பூர் மற்றும் எண்ணூர் விரிவாக்க திட்டங்களுக்கு மூடுவிழாவா?



## தனியாரிடம் மின்சாரத்தை வாங்க, தமிழக அரசு மின்உற்பத்தி திட்டங்களை மூடிவிட ஏற்பாடா?

- எஸ். இராஜேந்திரன்

தமிழகத்தில் மின்சார உற்பத்திக்கும், பயன்பாட்டிற்கும் மிகப்பெரிய இடைவெளி இருந்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் அதிமுக அரசு அறிவித்த மின்உற்பத்தி திட்டங்களில் முக்கியமாக எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கம் 600மெகாவாட் உற்பத்தி திட்டத்தையும் உப்பூர் அனல் மின்உற்பத்தி திட்டம் 2X800 மெகாவாட் (1600 மெகாவாட்) இந்த இரு மின் திட்டங்களையும் மூடுவிழா காண மறைமுக நடவடிக்கைகளை தமிழக அரசும் மின்வாரியமும் எடுத்து வருகிறது. இந்த மின்உற்பத்தி திட்டங்கள் 2018ல் உற்பத்தியை துவக்கி இருக்க வேண்டும்.

ஆனால் அனுபவம் வாய்ந்த அரசின் BHEL போன்ற பொதுத்துறை நிறுவனங்களுக்கு வழங்காமல் தனியார் கொள்ளையடிக்க வழி அமைத்து கொடுத்தது தமிழக அரசும், மின்வாரியமும்.

எண்ணூர் விரிவாக்க திட்டத்தின் மதிப்பீடு ரூ. 4000/- கோடி ஆரம்பத்தில் லாண்ட்கோ என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது ஆரம்ப கட்ட பணிகளுக்காக ரூ. 700 /- கோடி வழங்கப்பட்டது. பணிகளை பாதியிலே நிறுத்திவிட்டு லாண்ட்கோ நிறுவனம் சென்றுவிட்டது 2017ம் ஆண்டு மீண்டும் மீண்டும் மறு ஒப்பந்தம் கோரப்பட்டு பி.ஜி.ஆர். என்ற கம்பெனிக்கு ரூ. 4600/-கோடிக்கு டெண்டர் விடப்பட்டது. வங்கி உத்தரவாதம் சமர்ப்பிக்காத காரணத்தால் இந்த மின்உற்பத்தி திட்டம் நிறுத்தப்பட வாய்ப்புள்ளது.

ஏற்கனவே ரூ. 4000/- கோடிக்கு விடப்பட்ட டெண்டரில் பாதிபணிகளை செய்து லாண்ட்கோ என்ற கம்பெனி சுருட்டியது ரூ. 700/- கோடி தற்போது 2017ம் ஆண்டில் மீண்டும் பி.ஜி.ஆர் என்ற கம்பெனிக்கு டெண்டர் விட்டது. ரூ. 4600/- கோடி உரிய காலத்தில் BHEL போன்ற கம்பெனிகளுக்கு டெண்டர் விட்டு பணிகள் துவங்கி முடிவு பெற்றிருந்தால் ரூ. 1300/- கோடி நஷ்டம் அடைந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

கடந்த 2016ல் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உப்பூர் சூப்பர் அனல் மின் திட்டம் 2 X 800 (1600 மெகாவாட்) திட்டமதிப்பீடு போடப்பட்ட பொழுது ரூ. 16000 கோடி இதுவரை சுமார் ரூ. 400/- கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இங்கு பணியாற்றிவரும் பொறியாளர்கள் வேறு இடங்களுக்கு பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். நிலக்கரி மற்றும் நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட பிரச்சனைகள் காரணமாக திட்டமதிப்பீடு உயர்வதற்கான நிலை இருந்த காரணத்தால் மூடுவிழா காண முயற்சி எடுக்கிறதோ? நிலக்கரி கொண்டு வருவதற்கு ரயில் பாதைகள் சுமார் 12 கி. மீட்டர் தூரத்தில் அமைக்க தோராயமாக ரூ. 12,000 கோடியும், அதே போல கடல் நீரை Cooling Purpose க்காக சுமார் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு கொண்டு வருவதற்கு தோராயமாக ரூ. 8000/- கோடியும் திட்டமிடப்பட்டுள்ளது. இது கூடுதல் செலவு என்ற காரணத்தால் திட்ட மதிப்பீடு மறு ஒப்புதல் அளிக்க வேண்டிய தமிழக அரசு இந்த திட்டத்தை நிறுத்துவது என்பது சரியல்ல.

தமிழக மின்வாரியத்தின் அலட்சியத்தால் மக்களின் வரிப்பணம், வீணாவதோடு இந்த மின்உற்பத்தி திட்டங்களை நிறுத்தி தனியாரிடம் அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்குவதற்கு மறைமுக ஏற்பாடோ? என கேள்வி எழுகிறது.

தமிழக மின்வாரியத்தில் ஒப்பந்தம் முறையை புகுத்தி நிரந்தரமான பணிகளில் தனியாருக்கு விட தமிழக அரசு திட்டமிட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக 3 துணை மின்நிலையங்களை (கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சங்கராபுரம், மதுரையில் சமயநல்லூர், சென்னை அண்ணாசாலையில் உள்ள தலைமையக வளாகத்தில்) இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிக்கவும், இயக்கவும் சுமார் 93.67 லட்சம் ஒதுக்கீடு செய்து டெண்டர் கோர நடவடிக்கை எடுத்து வருகிறது. மின்வாரிய ஊழியர்கள், பொறியாளர்கள் ஆகியோரின் பதவி உயர்வு பாதிக்கப்படுவதுடன் அரசு துறையில் புதிய வேலை வாய்ப்புகள் படித்த இளைஞர்களுக்கு கிடைக்காமல் போகும் அபாயம் உள்ளது.

மேலும் எண்ணூர் அனல் மின்நிலையம் உற்பத்தியை நிறுத்திய காரணத்தால் அங்கு பணியாற்றிய சுமார் 300க்கும் மேற்பட்ட ஊழியர்களை வடசென்னை அனல் மின்நிலையம் அலகு 1 மற்றும் 2ல் தற்காலிக பணி இடமாற்றம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்தனர். ஆனால் ஒப்பந்த தாரர்களின் சூழ்ச்சிக்கு இரையாகி இந்த உற்பத்தி துறையில் அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களை வினியோக பிரிவில் மாறுதல் செய்தது என்பது ஒப்பந்த தாரர்களுக்கு கூடுதல் சலுகை வழங்கவோ என சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

தமிழக அதிமுக அரசு அவர்களது அம்மா துவக்கி வைத்த திட்டத்தை மூடச் செய்வதும், மின்வாரியத்தை மேலும் நஷ்டத்திற்கு கொண்டு செல்வதும் சரியானதா என்பதை சிந்திக்க வேண்டும்.

தமிழக மின்சார வாரியம் உப்பூர் மற்றும் எண்ணூர் விரிவாக்க திட்டங்களை நிறுத்துவதற்கு முயல்கிறது என நமது அக்டோபர் 2020 மின்கதிர் இதழில் பிரசுரித்திருந்தோம். புதிய அரசு பதவியேற்கும் நிலையில் அவசர அவசரமாக 27.04.2021-ல் நடைபெற்ற வாரிய கூட்டத்தில் ரத்து செய்வதற்கு அனுமதி பெற்றும் அறிவிப்பும் வெளியிடப் பட்டுள்ளனர்.

இந்த திட்டங்களுக்கு இதுவரை செலவு செய்யப்பட்டுள்ள சுமார் 3000 கோடி, மக்களின் வரிப்பணத்தை செலவு செய்து தற்போது இத்திட்டம் தேவை யில்லை என முடிவு எடுக்கும் நிலை எதனால் வந்தது?

தனியாரிடத்தில் அதிக விலை க்கு மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்காகவா என்ற கேள்வி எழுகிறது.

புதிய திமுக அரசு கவனம் செலுத்த வேண்டும்.

# மேதின அறைகூவல்



## புதிய இந்தியாவை படைக்க ஒன்று சேர்வோம்!

உலகத் தொழிலாளர்களின் பெருமைக்குரிய ஒற்றுமைத் திருநாளான மே தினத்தில், தமிழகத்தின் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் புரட்சிகரமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். உலக மக்களுக்கு, குறிப்பாகதொழிலாளர்களுக்கு நெருக்கடி சூழ்ந்துள்ள இவ்வேளையில், அதை வெற்றிகரமாகக் கடந்து செல்வதற்கான விரிவடைந்த ஒற்றுமையை உருவாக்கவும், கட்டமைந்த உறுதிமிக்க போராட்டங்கள் வலுப்பெறவும், இந்த 2021 ஆம் ஆண்டின் மே தினம் வழிகாட்டட்டும்.

சென்ற ஆண்டில் தொடங்கிய கொரோனா பெருந்தொற்று, மனித குலத்தை ஆட்டிப்படைத்தது. மீண்டும்இரண்டாவது அலை குரூரமாக உயர்ந்து அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. நமது அருமையான தலைவர்களையும், ஊழியர்களையும் இந்த பெருந்தொற்று பறித்துச் சென்றது. அவர்களுக்கும், உலகம் முழுவதிலும் இதனால்மரணமடைந்த லட்சக்கணக்கான மக்களுக்கும் தமிழக தொழிலாளி வர்க்கத்தின் சார்பில் நெஞ்சார்ந்த அஞ்சலி செலுத்துகிறோம்.

### தலை வணங்குகிறோம்

உலக மக்கள் அனைவருக்கும் சுகாதாரமான வாழ்க்கை, பணியிடப் பாதுகாப்பு, தரமான உணவு, குடிநீர்,குழந்தைகளுக்கு கல்வி, விரிவான தரமான விலையற்ற பொது மருத்துவ சேவை ஆகியவை கிடைக்க வேண்டியதன் அவசியத்தை இந்த பெருந்தொற்று அழுத்தமாக எடுத்துரைத்துள்ளது. இவற்றை உறுதிப்படுத்துவதற்கான கோரிக்கைகளை எழுப்பியும், பொது முடக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு, மத்திய - மாநில அரசுகள் எடுத்தமக்கள் விரோத, தொழிலாளர் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும், இந்த கொரோனா காலத்திலும் ஏராளமான போராட்டங்களில் நமது தோழர்கள் இறங்கினார்கள். ஒவ்வொரு வீட்டிலும், தெரு முனைகளிலும் உரிமை முழக்கங்களை எழுப்பினார்கள். இதற்காக தமிழக அரசு போட்டுள்ள வழக்குகளையும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பெருமைக்குரிய வீரர்களுக்கு நமது வணக்கத்தையும் பாராட்டுகளையும் உரித்தாக்கு கிறோம்.

பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டுவிடாமல் தடுக்க, மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், உள்ளாட்சி ஊழியர்கள், போக்குவரத்துப் பணியாளர்கள் உள்ளிட்டோர் தமது உயிரைப்பணயம் வைத்து பொதுமக்களுக்கு உயரிய பணியாற்றியிருக்கிறார்கள். உறவுகளும் நட்புகளும் வேலையை விட்டுவருமாறு வலியுறுத்திய போதிலும், தினக்கூலி தற்காலிக தொழிலாளர்கள் உள்ளிட்ட ஒரு தொழிலாளி கூட களத்தைவிட்டு நீங்க மறுத்து சேவையாற்றினர்.

அந்த உழைப்பாளிகளின் உன்னத அர்ப்பணிப்பு உணர்வுக்கும், தன்னல மறுப்புக்கும் தலை வணங்குகிறோம்.உற்பத்தி முடங்கி, வேலை இழந்து, உயிருக்கு அஞ்சியிருந்த நெருக்கடியிலும் கூட முதலாளித்துவம் தனது குரூர முகத்தைக் காட்டியது. அம்பானி, அதானி உள்ளிட்ட உள்நாட்டு, அயல்நாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபம், சாதாரண காலத்தைக் காட்டிலும் இந்த காலத்தில் கூடுதலாக அதிகரித்துள்ளது.

## பெருலாப வேட்டை

கொரோனாவுக்கு தடுப்பூசி மருந்து கண்டுபிடிப்பதை பெருலாப வேட்டையாகக் கருதி, பன்னாட்டு நிறுவனங்கள் அலைமோதின. இந்தியாவில் இரண்டு தடுப்பூசி மருந்துகள்அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பெரும் பாதிப்பில் உலகிலேயே இரண்டாவது, மூன்றாவது இடத்தை வகித்த, மக்கள் தொகை அதிகமுள்ள இந்தியா தடுப்பூசி செலுத்துவதில் எட்டாவது, ஒன்பதாவது இடத்தில் பின்தங்கியுள்ளது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசி மருந்துகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. உள்நாட்டில் மருந்துக்கு பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் நலன் காக்க வேண்டிய அரசு, தடுப்பூசி மருந்துகளை தனியாரிடம் வாங்கிக் கொள்ளுமாறு கூறி கை விரிக்கிறது. கார்ப்பரேட்நிறுவனங்களுக்கு சாதகமாக மத்திய அரசின் கொள்கை தடுப்பூசி விலை மடமடவென உயர்வதற்கு வழி வகுத்திருக்கிறது. ஆக்சிஜன் தட்டுப்பாட்டால் உள்நாட்டின் மக்கள் உயிரிழந்து கொண்டிருக்கும்போது, ஆக்சிஜன் சிலிண்டர்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மக்கள் உயிரைக் காப்பாற்றும் நோக்கம் இல்லாமல், எல்லாமே பெருலாபம் ஈட்டுவதற்கான வாய்ப்பாக மடைமாற்றப்படுகின்றன. தன் சகமனிதர்களின் உயிர் இழந்த உடல்களை மானுடம் எண்ணிக் கொண்டிருக்கும் வேளையில், இந்த லாப வேட்டை சகிக்க முடியாததாக இருக்கிறது.

இவ்வளவு பெரிய நாடான இந்தியாவுக்கு தடுப்பூசி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான உரிமம், இரண்டு நிறுவனங்களுக்கு மட்டுமே தரப்பட்டுள்ளது வியப்பளிக்கிறது. நீலகிரி பாஸ்டியர் இன்ஸ்டிடியூட், கிண்டி கிங் இன்ஸ்டிடியூட், பிசிஜி தடுப்பூசி நிறுவனம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களில் கொரோனா தடுப்பூசி மருந்துகளை உற்பத்தி செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். செங்கல்பட்டில் உற்பத்திக்கு ஆயத்த நிலையில் உள்ள மருந்து நிறுவனத்தை உடனே செயல்படுத்த வேண்டும். இந்தியா உட்பட உலக மக்கள் அனைவருக்கும் முற்றிலும் இலவசமாக கொரோனா தடுப்பூசி போடவேண்டும் என்பதே உலகத் தொழிற்சங்க சம்மேளனம் வைத்துள்ள கோரிக்கையாகும்.

## முடங்கிய வாழ்க்கை

எந்த ஆயத்தமும் இல்லாமல், சென்ற ஆண்டில் மத்திய அரசு பொறுப்பற்று அறிவித்த பொது முடக்கத்தால் இந்திய மக்கள், குறிப்பாக உழைத்து உணவை ஈட்டும் கோடிக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள், முன் கண்டறியாத அவல வாழ்க்கையை அனுபவித்தன. துரிதவேகத்தில் செல்லும் போக்குவரத்து வாகனங்கள், ரயில்கள் பல லட்சக்கணக்கில் இருக்கும் நாட்டில், பல நூறு, ஆயிரம்கிலோ மீட்டர் தூரங்களை காலால் நடந்தே கடக்க வேண்டிய துயரம் லட்சக்கணக்கான புலம் பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கு நேர்ந்தது கண் கொண்டு பார்க்க முடியாத வேதனையாகும். இவர்களைக் கூட மத்திய மாநிலஅரசுகள் தண்டித்தன; தடியடி நடத்தின. இரக்கமற்று மத்தியமந்திரிகள் இவர்களைக் கிண்டலும் செய்தார்கள்.நீடித்த பொது முடக்கம், சிறு, குறு, நடுத்தரத் தொழில்நிறுவனங்களை இனி இயங்க இயலாதவாறு மூடிவிட்டது. ஆறு கோடிப் பேருக்கு மேல் வேலை இழந்து விட்டனர். இதையே காரணமாகக் கொண்டு கார்ப்பரேட் நிறுவனங்கள் தமது நிரந்தர தொழிலாளர்களை வேலையை விட்டு வெளியேற்றின. வேலை இழந்த தொழிலாளர்களின் கையறு நிலையை பயன்படுத்தி, உழைப்பை ஒட்டச் சுரண்டி சம்பளத் தொகையை பல மடங்கு குறைத்தன.

இந்தப் பின்னணியில், இந்திய தொழிலாளர்கள் 150 ஆண்டு காலமாக போராடி

வென்றெடுத்த 44 தொழிலாளர் சட்டங்களை மத்திய அரசு வெட்டிக் குறைத்து 4 சட்டத்தொகுப்புகளாக்கியது. விவசாயிகளை நிலத்தை விட்டுவிரட்டி, விவசாயத்தை கார்ப்பரேட்களிடம் ஒப்படைக்கும் சதியாக, மூன்று வேளாண் சட்டங்களையும் நிறைவேற்றியது. நாடாளுமன்ற ஜனநாயகத்தை சாகடித்து, விதிமுறைகளை மீறி சர்வாதிகார முறையில் இவை சட்டங்களாக்கப்பட்டன.'வளர்ச்சியின் நாயகன்' என தம்பட்டம் அடித்து ஆட்சியைப் பிடித்த மோடியின் தவறான பொருளாதார கொள்கைகளால், நாடு இன்று கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு ஆட்பட்டிருக்கிறது. இதிலிருந்து மீள வழி தெரியாமல், விடுதலை அடைந்த நாளிலிருந்து இந்திய மக்களின் பொதுச் சொத்தாக உருவாக்கப்பட்டிருந்த பொதுத்துறை நிறுவனங்களை எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக மோடி அரசு விற்றுக் கொண்டிருக்கிறது. மத்திய அரசுக்கு பெரும் லாபப் பங்கீடும் தந்து, முறையாக வரி செலுத்தி வந்த பொதுத்துறை நிறுவனங்கள் ஒவ்வொன்றாக விற்கப்பட்டு வருகின்றன. பொன் முட்டையிடும் வாத்தை அறுத்து பார்த்த அறிவாளி போல, மோடி அரசு பொதுச்சொத்தை சூறையாடி வருகிறது.

கார்ப்பரேட் முதலாளிகளுக்கு சாதகமாக சட்டங்களை திருத்தியமைத்து, மிகப் பெருமளவுக்கு வங்கிக் கடன்களை தந்து, வரி குறைப்பு செய்து, சலுகைகளை வாரி வழங்கி, ஒரு சில இந்திய கோடீஸ்வரர்கள் உலகப் பெரும் பணக்காரர்பட்டியலில் இடம் பெற மோடி அரசு வழி செய்திருக்கிறது. அதே நேரத்தில் உலகின் மிக அதிகமான மக்கள் கடும் பட்டினியில் உள்ள 15 நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம் பெற்றிருப்பது, இந்திய மக்களின் வயிற்றில் அடித்து இந்த கோடீஸ்வரர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதை அம்பலப்படுத்தியிருக்கிறது.

## விண்ணை முட்டும் விலைவாசி உயர்வு

கட்டுக்கடங்காமல் உயரும் விலைவாசியால் மக்களின் வாழ்க்கை அழிக்கப்பட்டுவருகிறது. கல்வியும், மருத்துவமும் வணிக மயமாக்கப்பட்டு மக்களின் கைக்கு எட்டாத உயரத்துக்கு சென்றுவிட்டன. நீட் போன்ற செயற்கையான வடிகட்டும் முறைகளால், சாதாரண குடும்பங்களில் இருந்து வந்த மாணவர்களுக்கு உயர்கல்வி மறுக்கப்படுகிறது. ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, நலிவடைந்த மக்கள் பகுதி, சமூக பொருளாதார மேம்பாடு அடைவது திட்டமிட்டு தடுக்கப்படுகிறது. பிரச்சனைகளை திசை திருப்புவதற்காக, மதவெறியையும் சாதி வெறியையும் தூண்டி, மக்களை பாரதிய ஜனதாபிளவுபடுத்தி வருகிறது. இந்த வெட்கங்கெட்ட செயலை சோசியல் இன்ஜினியரிங் என்று அதைப் பெருமையாகவேறு சொல்லிக் கொள்கிறது. அரசை கண்காணிப்பதற்காக இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கி வைத்த நீதிமன்றங்கள், கணக்கு தணிக்கை அமைப்புகள், புலனாய்வுநிறுவனங்கள் உள்ளிட்டவற்றை வெறும் பொம்மைகளாக பாரதிய ஜனதா அரசு மாற்றிவிட்டது. ஊடகங்கள் குரல்எழுப்ப முடியாமல் அடக்கப்பட்டு இருக்கின்றன. உழைக்கும்மக்களின் துயரங்களும் உரிமைகளுக்கான அவர்களது முழக்கமும் வெளியே தெரிந்து விடாமல் மறைக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் விளைவாக தமிழக மக்கள் பாரதிய ஜனதா மீதும் அதன் தனிப்பெரும் தலைவரான பிரதமர் மோடி மீதும் வெறுப்பும் கசப்பும் அடைந்துள்ளனர். சட்டப்பேரவைத் தேர்தலில் சொந்த கட்சி வேட்பாளர்கள் கூட மோடி படத்தை போட்டு பரப்புரை செய்ய முடியாத அழுத்தத்தை தமிழக மக்கள் பாரதிய ஜனதாவுக்கு தந்திருக்கின்றனர்.

வாக்குச்சீட்டு முறையில் தேர்தல் நடத்தினால், வாக்கு எண்ணிக்கை முடிக்க மூன்று நாட்கள் ஆகிவிடும் என்று காரணம் சொல்லி மறுத்தார்கள். ஆனால், நான்கு மணி நேரத்தில் வாக்கு எண்ணிக்கை முடிக்கக்கூடிய நவீன எந்திரங்களில் பதிந்த வாக்குகளை, ஏறத்தாழ ஒரு மாதத்திற்கும் மேலாக அடை காத்து வருகிறார்கள். உழவர்களையும், உழைக்கும் மக்களையும் பொருட்டாகக் கருதாமல் மோடி அரசுக்கு வால் பிடிப்பதையே வாழ்வின் கடமையாகக் கொண்டிருந்த எடப்பாடி பழனிச்சாமியின் ஆடம்பர, அலங்கார தர்பார் முடிவுக்கு வந்திருக்கிறது. மே இரண்டாம் தேதி வாக்கு எண்ணிக்கை நடக்கிறது. திராவிட முன்னேற்றக்

கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி பெறும் என்பதை மக்களின் கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

## ஒற்றுமை எனும் வலிய ஆயுதம்

தொழிலாளி வர்க்க அரசியலை உயிர் மூச்சாகக் கொண்ட, நம்முடைய 12 தோழர்கள், இந்த சட்டப் பேரவைத்தேர்தல் களத்தில் நிற்கிறார்கள். சென்ற ஐந்து ஆண்டுகள்போலல்லாது, நமது போராட்ட குரல்கள், சட்டப்பேரவையில் சுருதி குறையாது எதிரொலிக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

தொழிலாளர் பிரச்சனைகளில், ஒரு 'மயான அமைதி'யை ஏற்படுத்த மோடி - எடப்பாடி அரசுகள் முயற்சித்தன. பாறையிலும் வேர்விடும் அரச மரம் போல, அந்த முயற்சிகளை தொழிலாளர்கள் போராடி முறியடித்து வந்துள்ளனர். ஆழ்நெருக்கடிக்கு ஆட்பட்டுள்ள முதலாளித்துவம், உயிர் பிழைப் பதற்காக தனது நெருக்கடிகளை எல்லாம் தொழி லாளர்கள் தலை மீது சுமத்த முயற்சிக்கிறது.எந்த வலிய முற்றுகையையும் உடைத்தெறிய வல்ல ஒற்றுமை என்னும் ஆயுதம் நம் கைகளில் இருக்கிறது.

உலகத்துக்கே இலவச மருத்துவம் தந்த வீரஞ்செறிந்த கியூபா வென்று நிலை பெற வாழ்த்துவோம்!இஸ்ரேலின் முரட்டு பிடியிலிருந்து பாலஸ்தீனம் விடுதலை பெற குரல்கொடுப்போம்! வெனிசுலா, சிரியா,லெபனான் மக்களுக்கு நமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துவோம்! ஏகாதிபத்திய ஒடுக்குமுறைகளை உடைத்தெறிந்து, சுதந்திரமான, நியாயமான, ஜனநாயக உலகை நிலைநாட்ட உறுதி ஏற்போம்! இந்த ஆண்டில் உலக தொழிற்சங்க சம்மேளனம் (WFTU) நடத்துகிற உலக தொழிற்சங்கப் பேராயம் வெற்றி பெறத் துணை நிற்போம்!

நமது சர்வதேச சகோதரர்களோடு கரம் கோர்ப்போம்! இந்தியா முழுமையிலும் உள்ள கரத்தாலும் கருத்தாலும் உழைக்கும் மக்கள், விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் எல்லொரோடும், ஒரு புதிய இந்தியாவை படைக்கும் அணியாக ஒன்று சேர்வோம்!

**தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக!**

**மே தினம் நீடூழி வாழ்க!**



சிஐடியு மாநிலக்குழு அலுவலகத்தில் 1.5.2021 அன்று மேதினம் விழா சிஐடியு மாநிலத் தலைவர் தோழர் அ. சவுந்திரராசன் தலைமையில் கொடியேற்றப்பட்டது. சிஐடியு மாநில நிர்வாகிகள் கோபிகுமார், அ. கிருஷ்ணமூர்த்தி, டெய்சி, மாநிலக்குழு உறுப்பினர் எச். வசந்தி ஆகியோருடன் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன், பொருளாளர் எம். வெங்கடேசன் மாநில செயற்குழு உறுப்பினர் டி.ஆர். விஜயகண்ணன் மற்றும் அலுவலக செயலாளர்கள் கோபால், பி. பூவராகவன், திருமலை ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கோவிட்-19ன் இரண்டாம் அலை!



கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் கொரானா தொற்று காரணமாக தேசத்தின் பொருளாதாரமே முடங்கிப் போனது. கடந்த டிசம்பர் 2020, ஜனவரி 2021 மாதங்களில் ஓரளவு நிலைமை சிரடைந்தது என நினைத்த பொழுது கொரானாவின் இரண்டாம் அலை உருவாகி இன்று மக்கள் அதை எதிர்த்துப் போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

கடந்த பொது முடக்கத்தின் போது நாடு முழுவதும் பாமர மக்கள் முறைசாரா தொழிலாளர்கள் சிறுகுறு விவசாயிகள் என அனைவரும் பாதிக்கப்பட்ட நிலையில் மீண்டும் ஒரு பொது முடக்கத்தை தேசம் சந்திக்க தயாராக இல்லை. புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் பொது முடக்கம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் தங்களது சொந்த மாநிலங்களுக்கு திரும்பச் செல்லும் நிலைமை உருவாகியுள்ளது.

இந்த தொற்று நோய்க்கு எதிராக, இந்திய நிறுவனங்களின் தயாரிப்பில் உருவான தடுப்பூசியை முழுமையாக இந்திய மக்களுக்கு பயன்படுத்தாமல் 84 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து உலகத்தையே பாதுகாத்தவன் என டுபாக்கூர் விடும் பிரதமர் மந்திரியல்லவா நமக்கு வாய்த்திருக்கிறார்.

ஆரம்ப கட்டத்தில் 45 வயதை கடந்தவர்களுக்கு தடுப்பூசி என்று கூறிய ஆட்சியாளர்கள் தற்போதாவது மனம் இறங்கி 18 வயதுக்கும் மேற்பட்டவர்கள் தடுப்பூசி போடலாமென நோய் தெற்று பரவலின் காரணமாக அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் ஆக்ஸிஜன் தட்டுப்பாடு, தடுப்பூசி தட்டுப்பாடு என அத்தியாவசிய உயிர்காக்கும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் சூழலில் மக்கள் வெகுவாக பாதித்து மரணத்தை தழுவுகின்ற அவலநிலையை மோடி அரசு உருவாக்கியிருக்கிறது. மருத்துவமனைகளில் படுக்கைகள் நிரம்பி வழிய துவங்கி விட்டன.

குஜராத், உ.பி போன்ற மாநிலங்களில் இந்த தொற்று நோயால் இறந்தவர்களின் உடல்களை எரியூட்டக்கூடிய மயான வசதி கூட இல்லாமல் கிடைத்த இடங்களில் உடல்களை எரியூட்டும் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

கிளின் இந்தியா, சுவிட்ச் பாரத் என பெயர் மட்டுமே எம் தேசத்திற்கு வைக்கும் நிலை உள்ளது. 132 கோடி மக்களை பாதுகாக்க வேண்டிய மத்திய பி.ஜே.பி. அரசு பொறுப்புக்களை தட்டிக்கழித்து மாநில அரசுகளின் மீது சுமையை சுமத்தி விட்டது.

இந்த கொடிய தொற்று நோய் காலத்தில் அம்பானி,அதானி வகையறாக்கள் பெரும் கோடீஸ்வர்களாக உயர்ந்துவதற்கு சாதனை புரிந்ததே இந்த ஆட்சியாளர்களின் மிகப்பெரிய சாதனை!

நோய் தொற்றின் பரவலை உணர்ந்தும் கூட மத்திய பிஜேபி அரசு கும்பமேளா நடத்த அனுமதி அளித்ததின் மூலம் டெல்லி, உ.பி. உத்ரகாண்ட் போன்ற மாநிலங்களில் வெகுவேகமாக பரவியதாக சமூக ஆர்வலர்கள் கூறி வருகின்றனர். ஆனால் 40 நாட்களுக்கு மேல் விவசாயிகள் டெல்லியில் இந்தச் சூழலை புரிந்து கொண்டு போராடி வருவதை கண்டு கொள்ளாத அரசாக பி.ஜே.பி. அரசு இருக்கிறது.

கை தட்டுங்கள், ஒளி ஏற்றுதல், ஒலி எழுப்புதல் என அத்தனை கோமாளித்தனத்தையும் செய்து மக்களை நடுத்தெருவில் நிறுத்திய அரசு. மாட்டு மூத்திரம் குடித்தால் போதும் என்று சொன்ன உ.பி. முதல்வர் யோகி ஆதித்திநாத்தும் இந்த தொற்று

நோய்க்கு தப்பவில்லை. உத்திரபிரதேச மாநிலம் காஜியாபாத்தில், மயானங்களில் எரியூட்ட சடலங்கள் நீண்ட நேரம் காக்க வைக்கப்படுகின்றன. அந்த நேரத்தில் இறந்தவரின் முகத்தின் ஒரு பகுதியை நாய் கடித்து குதறிவிட்டது. அந்த குடும்பம் அடைந்த வேதனைக்கு அளவே இல்லை.

மகாராஷ்டிரா அவுரங்காபாத்தில் 22 கொரானா நோயாளிகளை ஒரே வேனில் ஏற்றி சென்ற கொடூரம். அரியானவின் குருகிராமில் மரத்தடியில் சிகிச்சை அளிக்கும் நிலை.

Covid- 19 இரண்டாவது அலை கடுமையாக பாதிப்பை ஏற்படுத்தும் என்று உலக சுகாதார அமைப்பு (WHO) சொன்ன பொழுது முதல் அலையின் தாக்கத்தில் படிப்பினையை கற்றுக் கொள்ளாதவர் பிரதமர் மோடி. தொலைக்காட்சியில் தோன்றி கோமாளிதனமான உரையின் மூலம் பாட்டுப்பாடி, கொரானாவை விரட்ட நினைக்கும் தலைவர் தான் இந்தியாவின் பிரதமர்.

ஆனால் இந்தியாவில் தமது மாநிலத்தின் தேவையை உணர்ந்து, ஆக்ஸிஜன் பற்றாக்குறை ஏற்படும் எனக்கருதி, ஆக்ஸிஜன் உற்பத்தியை துவக்கி இன்று தனது மாநில மக்களின் தேவைக்கு போக மீதமுள்ளதை பக்கத்து மாநிலங்களுக்கு கொடுக்கும் கேரள இடது சாரி அரசை கண்டாவது பாடம் கற்றுக்கொள்ளுங்கள் Mr. மோடி அவர்களே!

இனி ஒரு லாக் டவுனை சந்தித்தால் தாங்காது பிரதமரே! எம் தேசம்! கொரானா நோயை விட தொழிலாளி வர்க்கம் பசி, பட்டினி வறுமையால் சாக நேரிடும்.

ஆக்கபூர்வமான, அறிவியல் பூர்வமாக சிந்தியுங்கள். உங்கள் இந்துத்துவா கொள்கையை தூக்கி எறிந்து, மனித நேயத்தை கொஞ்சம் துளிர் விட செய்யுங்கள்.

ஒருவேளை உங்கள் பாவங்கள் மன்னிக்க முடியாவிட்டாலும் மறக்க நினைக்க முயற்சிக்கிறோம்.

மின்வாரிய பணியாளர்களே!

முன் களப்பணியாளர்களாக பணியாற்றும் நாம் நமது நலத்தையும், நமது குடும்ப உறுப்பினர்கள் நலனையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம்முன் உள்ளது.

எனவே சமூக விதிகளை கடை பிடிப்போம்.

ஒற்றுமையாக செயல்பட்டு கொரானா தொற்று நோயிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வோம்.

## தோழர் DJ நினைவு தினம்

மத்திய அமைப்பின் ஸ்தாபக தலைவர் அன்புத் தோழர் து.ஜானகிராமன் நினைவு தினம் மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டது. **D.J**வின் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. தேனியின் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தோழர் **D.J** வின் 88வது பிறந்த நாளை முன்னிட்டு 21.04.2021 அன்று கோவையில் 30-க்கும் மேற்பட்ட ஒப்பந்த ஊழியர்களுக்கும் நமது பகுதிநேர பணியாளர்களுக்கு (நிரந்தரத்தை எதிர் நோக்குபவர்கள்) கோவை தோழர்கள், மளிகை பொருட்கள் 5 கிலோ அரிசி, காய்கறி ஆகியவற்றை வழங்கினார்கள். மூத்த தோழர்கள் 12 பேருக்கு கேடயம் மற்றும் சால்வை அணிவித்து கௌரவப் படுத்தினார்கள். சங்க அலுவலகத்திற்கு முதலுதவி பெட்டி வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாநில துணை தலைவர் தோழர் கோபாலகிருஷ்ணன், வடக்கு கிளை செயலாளர் மணிகண்டன், தெற்கு கிளை செயலாளர் ரத்தினகுமார், மாநகர் கிளை இணைச்செயலாளர் சாதிக்பாட்சா, CITU மாவட்டத் துணைத் தலைவர் பெருமாள், DYFI மாவட்ட செயலாளர் கனகராஜ், கோவை கிளைகளின் நிர்வாகிகள், கலைச்செல்வி, சின்னத்தாய், மீனாட்சி, புவனேஷ்வரி, ஓய்வு பெற்ற அமைப்பின் தலைவர்கள் ராமசந்திரன், ஞானபிரகாகம், S.R. சுப்பிரமணியம், கனகமுத்து, உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தோழர் T. பழனிசாமி, இணைச்செயலாளர் தெற்கு கிளை அவர்கள் சிறப்பாக செய்து தலைமையேற்று நடத்தியது பாராட்டுக்குறியது.

ஆம்! தியாகங்களை வணங்கும்
புதிய தலைமுறை! வரலாறு பயணிக்கட்டும்...

# மின் தொடரமைப்பு கழகத்தை தனியாக செயல்படுத்த வாரிய நிர்வாகம் முயற்சி!

தமிழ்நாடு மின்சார வாரியம் பொதுச்துறை நிறுவன மாக செயல்பட்டு வந்தது. மின்சார சட்டம் 2003-ன் படி கம்பெனிகளாக மாற்றப்பட்ட பின்பு 01.11.2010 முதல் டான்ஜெட்கோ, டான் டிரான்ஸ்கோ எனஇரு கம்பெனி களாக செயல்படும் என அறிவிப்பு வெளியானது.

இது தொடர்பாக அறிவிக் கப்பட்ட அரசு ஆணை 100-ஐ எதிர்த்து மின் ஊழியர் மத்திய அமைப்பு நீதிமன்றம் சென்று தடை பெற்றது. அதன் பின்னர் மின்வாரிய நிர்வாக தரப்பில் பணியாளர்களின் பணி நிலை களில் அவர்கள் பெற்றுவரும் ஊதியம், பென்சன் உள்ளிட்ட சலுகைகளில் பாதிப்பு இருக்காது என நீதிமன்றத்தில் தந்த உறுதி மொழியின் அடிப்படையில் இடைக்கால தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஆனால் மின்வாரிய நிர்வாகம் தொழிற்சங்கங்களோடு கலந்து பேசி முத்தரப்பு ஒப்பந்தம் காணுவதற்கு தாயாராக இல்லை. வாரியம் தந்த ஆலோசனைகளில் கூட எந்தவித நிபந்தனையின்றி என்ற சொல்லை நீக்கி தான் ஆலோசனை வழங்கப்பட்டது.

மின்வாரிய ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் ஆகியோரின் பணி நிலைகளில் மாற்றத்தை நிர்வாகம் செய்ய முற்படுமேயானால் தொழிற் சங்கங்களை அழைத்து, பேச்சு வார்த்தை நடத்தி தீர்வுகாண வேண்டும். ஆனால் நிர்வாக இயக்குநர்/ டான்டிரான்ஸ்கோ அவர்கள் டிரான்ஸ்கோ கழகத்திற்கு தனியான நிர்வாகப் பிரிவை எழுத்துத்துறை பணியாளர்களுக்கு உருவாக்குவதற்கு 23.04.2021 ஆலோசனைக் கூட்டத்தை நடத்த திட்டமிட்டு இருந்தனர். தற்போது ஒத்தி வைக்கப்பட்டு உள்ளதாக அறிகிறோம்.

அரசு ஆணை 100-க்கு எதிரான மின் ஊழியர் மத்திய அமைப்பு தொடர்ந்த வழக்கில் வாரிய நிர்வாகம் தந்த உறுதி மொழியின் அடிப்படையில் பெறப்பட்ட இடைக்கால தீர்ப்புக்கு எதிரானதாகும்.

தொழிற்சங்கங்களை அவமதிக்கும் செயலை மின்வாரிய நிர்வாகம் தொடருமேயானால் போராடுவதைத்தவிர வேறு வழியில்லை.

**TAMIL NADU TRANSMISSION CORPORATION LIMITED**

SECRETARIAT BRANCH
144, ANNA SALAI,
CHENNAI-2.

Letter No.216/DS/TT/2021- 5 dated 17.04.2021

From
Thiru S.Shanmugam, B.E
Managing Director/TANTRANSCO

To
The Chief Engineer/Grid Operation/Chennai
The Chief Engineer/Protection and Communication/Chennai.
The Chief Engineer/System Operation/Chennai.
The Chief Engineer/Transmission/Chennai.
The Chief Engineer/Civil Transmission/Chennai.
The Chief Engineer/Transmission Project-I/Chennai.
The Chief Engineer/System Operation/Trichy.
The Chief Engineer/Transmission Project-II/Trichy.

Sir,

Sub: TANTRANSCO-Establishment – Meeting to be held on 23.4.2021
Intimation – Sent.

Ref: Letter No.216/DS/TT/2021-1 dated 7.1.2021.

----

I am to invite your attention to the reference cited and to inform that a meeting will be convened by the Joint Managing Director on 23.4.2021 with regard to take over the administration works of entire Tantransco Offices and bring the administrative control under one administration at Chennai in respect of provincial cadre i.e. upto Assistant Engineer.

2. I request you to attend the meeting on 23.4.2021 and also request you to bring the latest post continuance orders (1.3.2020 to 28.2.2021) in respect of the Superintending Engineers under your control.

Yours faithfully,

Sd/- N.KESAVAN
DEPUTY SECRETARY/TANTRANSCO
For MANAGING DIRECTOR/TANTRANSCO



# சட்டங்களையும் நீதிமன்ற தீர்ப்பையும் மதிக்குமா! தமிழக மின்சார வாரியம்!

தமிழக மின்சார வாரியம் மிகப்பெரிய பொதுத்துறை நிறுவனம். இது அரசுத்துறையில் அச்சாணியாக விளங்கக் கூடியது. அனைத்து தொழிலுக்கும் தாய் தொழிலாக விளங்கக் கூடியது. இது அரசுத்துறையாக இருந்தாலும், மாநில அரசு, மற்றும் மத்திய அரசு இயற்றுகின்ற அனைத்து சட்டங்களையும் அமல்படுத்தப்பட வேண்டிய நிறுவனமாகும். அரசின் சட்டங்கள் மட்டுமல்ல, நீதிமன்ற தீர்ப்புகளும் மின்வாரியத்தை கட்டுப்படுத்தும் என்பது யதார்த்தமான உண்மை, இதற்கு யாரும் விதிவிலக்கல்ல.

மின் வாரியத்தில் பணியாற்றுகின்ற ஒரு சில தலைமைப் பொறியாளர்கள் மற்றும் உள்ள ஒரு சில அதிகாரிகள் சட்டத்தை படிப்பதும் கிடையாது. நீதிமன்ற உத்தரவுகளை அமல்படுத்துவதும் கிடையாது. சட்டத்தை அமல்படுத்தாத போது, நீதிமன்றத்தின் மூலம் சட்டத்தை அமல்படுத்துகின்ற நடவடிக்கையை தொழிற்சங்கங்களும், ஒரு சில ஊழியர்களும் செய்கின்ற பொழுது, அது நிர்வாகத்தின் பலவீனத்தையும், நிர்வாகத்தில் பல்வேறு பிரச்சனைகளையும் உருவாக்குகிறது. இதனால் மின்வாரியத்திற்கு பொருளாதார இழப்பு, நேரம் இழப்பு, தேவையற்ற வேலைபளு மற்றும் அதிகாரி களுக்கு மனஅழுத்தம் உட்பட ஏற்படுகிறது. இதை சரி செய்வது தான் நிர்வாகத்தின் பிரதான கடமையாக இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் செய்வதில்லை.

உதாரணமாக அனல் மின் நிலையங்களில் 500-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணி செய்தால் அங்கு தொழிலாளர் நல அதிகாரி (LABOUR WELFARE OFFICER) நியமிக்கப்பட வேண்டும். இது 1990களில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. தொழிலாளர் நல அதிகாரியின் பணியானது கீழ்கண்டவாறு நிறைவேற்றப்பட வேண்டும்.

தொழிற்சாலை சட்ட உரிமம் புதுப்பித்தல் (FACTORIES ACT LICENCE) விபத்து,ஒப்பந்த ஊழியர்கள் சட்டபாதுகாப்பு, பாதுகாப்பு விதிகள் தொழிலாளர்கள் தொடர்பான தாவாக்கள் போன்றவற்றை அவருக்கு கடமையாக்கப்பட்டு, அவற்றை அங்கேயே தீர்க்க வேண்டும். ஆனால் நடைமுறையில் அவ்வாறு இல்லை. தொழிலாளர் நல அதிகாரி என்ற பதவி எதற்காக உருவாக்கப்பட்டதோ அவர் அந்த பணியை செய்யாமல் தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு அலுவலகத்தில் ஒருவர் வேலை செய்கின்றார் என்றால் நிர்வாக சீர்கேட்டிற்கு சிறந்த உதாரணம் இதைவிட எதுவும் இருக்க முடியாது. இது வாரிய தலைவருக்கு தெரியுமா?

அனல் மின் நிலையங்களில் எண்ணற்ற தொழிலாளர் பிரச்சனைகள், தொழிலாளர் தாவாக்கள் மற்ற துறைகளோடு செய்ய வேண்டிய பணிகள் மற்றும் அதன் சட்டதிட்டங்களை அமலாக்குவது போன்ற எதையும் செய்யாமல் இளநிலை உதவியாளர் போல் நடந்து கொள்வது LWO என்ற பதவிக்கான நியாயத்தை கற்பிக்க முடியாது. அனல் மின் நிலையத்தில் உள்ள முதன்மை அதிகாரி, தலைமை

பொறியாளராக உள்ளார். அவர் மட்டுமல்ல, மின் வாரியத்தின் எந்த அதிகாரியும், அரசாணைக்கும், சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றம் இயற்றுகின்ற சட்டங்களுக்கும் கட்டுப்பட்டவர்கள். அரசாணை எண் 950, நாள் 08.08.1990 அன்று வெளியிடப்பட்டது. உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தமிழக அரசின் தொழிலாளர்துறை, மின்சார வாரியத்திற்கு 14.08.1990 அன்று ஒரு கடிதம் அனுப்பியது. இந்த கடிதத்தில் அரசாணை950-ஐ கட்டாயம் மின்வாரியத்தில் கடைபிடிக்க வேண்டுமென்று கடிதம் அனுப்பி, அந்த கடிதத்தின் நகலை இணை ஆணையர்/லேபர் போன்ற துறைகளுக்கு அனுப்பி வைத்தது. இந்த அரசு ஆணை 950-ன் முக்கிய அம்சமே தடை செய்யப்பட்ட பகுதிகளில் ஒப்பந்த தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தக் கூடாது என்பது தான். ஆனால் அரசின் உத்தரவை அப்படியே மறுத்துவிட்டு, அங்கு ஒப்பந்த ஊழியர்களை தொடர்ச்சியாக மின்சார வாரியம் பயன்படுத்தி வருகிறது. தெழிற்சங்கங்கள் இதை கேட்டால், அங்கு ஒப்பந்த தொழிலாளர்கள் வேலை செய்யவில்லை, ஒப்பந்தகாரரின் தொழிலாளி வேலை செய்கிறார் என்று கவுண்டமணியின் வாழைப்பழம் கதையைப்போல பதிலளிக்கிறது மின்சார வாரிய நிர்வாகம்.

மின்வாரிய நிர்வாக அதிகாரிகள் மற்றும் பொறியாளர்கள் அரசாணையையும் ஒப்பந்த ஊழியர் ஒழுங்கு முறைப்படுத்துதல் சட்டம் 1972ஐயும் கண்டுக் கொள்வதே இல்லை. கடந்த காலங்களில் வாரியம் பிறப்பித்த உத்தரவையே வாரிய அதிகாரிகள் கடைபிடிக்கவில்லை என்பது வேடிக்கையாக உள்ளது. உதாரணமாக தலைமைப் பொறியாளர்/ பணியமைப்பு அவர்கள். ஒப்பந்தம் மற்றும் ஒப்பந்தகாரரிடம் பணி செய்யும் ஊழியர்கள் தொடர்பாக 29.012.2018, 16.03.2019 மற்றும் 06.08.2020 ஆகிய தேதிகளில் ஒப்பந்த ஊழியர்கள் ஒழுங்கு முறைபடுத்துதல் சட்டம் 1972-ன் அடிப்படையில் உத்தரவு வழங்கி உள்ளார். இந்த உத்தரவு அனல் மின் நிலையங்கள், மின் விநியோக வட்டங்கள், பொதுக்கட்டடுமான வட்டங்கள் அனைத்திற்கும் பொதுவாக பிறபிக்கப்பட்ட உத்தரவாகும். இந்த உத்தரவு இன்று வரை அமலாக்கம் செய்ய முடியவில்லை. இதில் குறிப்பாக ஒப்பந்த ஊழியர்களுடைய சம்பளம், இன்சூரன்ஸ், பாதுகாப்பு, போன்ற பல அம்சங்கள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்லப் படுகிறது. ஆனால் சரிபாதி அலுவலகங்களில் உத்தரவாக மட்டுமே இருக்கின்றது. ஏட்டு சுரக்காய் கரிக்கு உதவுமா?

ஒப்பந்த ஊழியர்களை அடிமையாக வேலை வாங்குவது, குறைந்தபட்ச ஊதியம் வழங்காதது. இன்சூரன்ஸ் திட்டம் அமல்படுத்தாதது,பாதுகாப்பு வசதிகள் செய்யாதது. முதன்மை முதலாளியாக மின்வாரியம் சட்டப்படி இருக்கின்றது என்பதை ஏற்க மறுப்பது, புதிய புதிய பெயர்களில் அவுட்சோர்சிங் விடுவது அனைத்தும் சட்டத்திற்கு எதிரான செயலாகும். சட்டத்தை பாதுகாத்து அமல்படுத்த வேண்டிய மின்வாரியம், சட்டத்திற்கு எதிராக நடப்பது சட்டவிரோதமான செயல் தானே? இதை மின் ஊழியர் மத்திய அமைப்பு ஏற்காது. அதற்கான போராட்டத்தை விரைவில் அறிவிக்கும். அந்த போராட்டக்களத்திற்கு ஒப்பந்த ஊழியர்கள் குடும்பத்தோடு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

ஒப்பந்த ஊழியர்களின் உறுதியான போராட்டமே! மின்வாரியத்தின் செவிட்டுக்காதுகளுக்கு ஒலிக்கும். ஒப்பந்த ஊழியர்கள் இல்லை என்று சொன்ன நிர்வாகத்தை ஆம் இருக்கிறார்கள் என்று சொல்ல வைப்போம்! மாற்றிக்காட்டுவோம்!

**- தி.ஜெயசங்கர்**

1. வயதை கடந்து வந்தவர்கள் அனுபவசாலிகள் அல்ல.. வலியை கடந்து வருபவர்களே வாழ்க்கையில் அனுபவசாலிகள்...
2. ஒரு நாள் எல்லாம் மாறும் என்று காத்திருக்காமல், அன்றே அதை மாற்றவதற்கான முயற்சி செய்..
3. திட்டமிட்டு உழைப்பை முதலீடு செய்து கொண்டே இருங்கள்.. சங்கமோ, அலுவலகமோ எந்த இடமாக இருந்தாலும் கண்டிப்பாக ஒருநாள் நீங்களே ஆச்சரியப்படும் அளவுக்கு நீங்கள் போட்ட உழைப்பு உங்களுக்கு பலன் அளிக்கும்.
4. குறிக்கோள் இல்லாத வாழ்க்கையும், சமூகத்திற்கு பயன்படாத அறிவும் முள் இல்லாத கடிகாரம் போன்றது. அது நின்றாலும் பயன் இல்லை, ஓடினாலும் பயன் இல்லை.
5. உங்களின் தோல்வி எங்கே ஒளிந்துள்ளது தெரியுமா பிரச்சனைகள் வரும் போது அல்ல, பிரச்சனைகளை கண்டு நீங்கள் பயந்த ஒதுங்கும் போது...
6. காலத்திற்கு பேசும் சக்தி கிடையாது... ஆனால் என்ன அதிசயம் பாருங்கள்... காலம் தான் எல்லாவற்றிற்கும் பதில் சொல்கிறது.

# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின்
# கூட்டு நடவடிக்கை குழு
# சென்னை

பெறுநர் நாள் 27.04.2021

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,**
**144, அண்ணாசாலை,**
**சென்னை** 600 002

**ஐயா, வணக்கம்**

பொருள் : **கோவிட்-19 இரண்டாம் அலை நோய் தொற்று வெகுவேகமாக பரவுதல் முன்னிட்டு - முககவசம் - சானிடைசர் மற்றும் பணியாளர்களின் வருகை - தொடர்பாக**

இந்தியாவில் தற்போது கொரானா நோய் தொற்றின் இரண்டாம் அலை வெகுவேகமாக பரவ ஆரம்பித்து விட்டது. இதன் தாக்கம் தமிழகத்திலும் அதிகமாக தொற்றுப்பரவ தொடங்கியுள்ளது. இந்த இரண்டாம் அலையில் நமது மின்வாரிய பணியாளர்கள் பாதிக்கப்பட்டு அதில் சிலர் மரணத்தை தழுவி விட்டனர்.

தமிழக அரசும் மாநிலத்தில் நோய் தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நமது மின்வாரிய ஊழியர்கள் கொரானா காலத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்தடை நீக்கம், மின் அளவு கணக்கீடு ஆகிய பணிகளை செய்து நோய் தொற்றுக்கு ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே நமது மின்வாரிய பணியாளர்களை பாதுகாக்க வேண்டி கீழ்கண்ட நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களை கேட்டுக்கொள்கிறோம்.

1. கொரானா தொற்று இரண்டாம் அலை வெகுவேகமாக பரவுவதால் அனைத்து அலுவலங்களிலும் 50 சதவீத பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியாற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

   தடையில்லா மின் விநியோகம் வழங்கும் பணியினை தவிர மற்ற பணிகளை (Agri reading, GIS Mapping) கோவிட் 19 - ன் தீவிரம் குறையும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.
2. அனைத்து அலுவலகங்களுக்கும் கோவிட் 19 முதல் அலையில் முன்பு கொடுத்தது போல சானிடைசர் முகக்கவசம் வழங்கப்பட வேண்டும். அதே போல அனைத்து அலுவலகங்களிலும் கிருமி நாசினி தெளிக்கப்பட வேண்டும்.
3. கணக்கீட்டு பணியாளர்கள் மற்றும் களப்ணியாளர்கள் கடுமையாக பாதிக்கப்படும் சூழல் உள்ளதால் அவர்கள் அனைவருக்கும் முன்னுரிமை அடிப்படையில் முககவசம், சானிடைசர் உடனடியாக வழங்க வேண்டும்.

4. கோவிட் 19 - இரண்டாம் அலை காரணமாக கணக்கீடு செய்ய முடியாத சூழல் ஏற்பட வாய்ப்புள்ளதை கணக்கில் கொண்டும், இந்த தொற்றின் பாதிப்பை உணர்ந்து முந்தைய மாத மின் கட்டணத்தை மே, ஜூன் மாதங்களில் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் வங்கிகள் மதியம் 2 மணிவரை மட்டுமே செயல்படும் சூழலில் வசூல் பணி நேரத்தையும் 1.30 மணி வரை மட்டுமே செய்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

5. இந்த நோய் தொற்று காலத்தில் நேரடியான ஆய்வு கூட்டங்களை நடத்துவதையும், பயிற்சி மையத்தில் பயிற்சி வகுப்புகள் நடத்துவதை அனைத்து அலுவலர்களும் கைவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. மின்வாரிய பணியாளர்கள் அனைவருக்கும் வயது வித்தியாசமின்றி கோவிட் 19- தொடர்பான தடுப்பூசி போடுவதற்கு அனைத்து வட்ட அலுவலகங்களிலும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

7. இரவு 10 மணிக்கு லாக்டவுன் ஆரம்பித்து விடுவதால் மின்வாரிய பணியாளர்கள் பணி முடித்து செல்வதிலும், முறைப்பணிக்கு இரவு வருவதிலும் காவல் துறையினரால் தடுக்கப் படுகிறார்கள். எனவே அடையாள அட்டையுடன், அவர்கள் பயன்படுத்தும் வாகனத்திற்கு Sticker வழங்கப்பட வேண்டும். காவல்துறைக்கு தக்க அறிவுரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் இக்கடிதத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்து மின்வாரிய பணியாளர்களின் நலன் கருதி தகுந்த உத்திரவை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

**தங்கள் உண்மையுள்ள**

தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம்

கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு(சிஐடியூ)

மின்சார பிரிவு அண்ணா தொழிற் சங்கம்

For மின்வாரிய ஜனதா தொழிற் சங்கம்

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

For ஐ.என்.டி.யு.சி (சொர்ணராஜ்)

மின்வாரிய பொறியாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் (என்.எல்.ஓ)

தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்(HMS)

மின்வாரிய பொறியாளர் கழகம்

கணக்கு அலுவலர் சங்கம்

கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

TNEB டாக்டர் அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் யூனியன்

மின்வாரிய பொறியாளர் யூனியன்

எம்ப்ளாயீஸ் பெடரேஷன்

# பணமாற்றுச் சலுகைக்கான ஒப்புவிப்பு விடுப்பும், ஓராண்டு காலத்திற்கு நிறுத்தி வைத்த அரசின் நடவடிக்கையை எதிர்த்து மத்திய அமைப்பின் போராட்டங்கள்

தமிழக அரசு கொடிய கொரானா தொற்றை காரணம் காட்டி மத்திய அரசின் நடவடிக்கையை பின்பற்றி பஞ்சப்படி,ஒப்புவிப்பு ஈட்டிய விடுப்பை பணமாற்றுச் சலுகை செய்வதை ஓராண்டுக்கு நிறுத்தி வைத்து அரசாணை பிறப்பித்தது.

தமிழக அரசின் ஊழியர் நலன் சார்ந்த பிரச்சனைகளை தொழிற்சங்கங்களின் போராட்டங்களுக்கு பின் அமலாக்கம் செய்யும் வாரியம், ஊழியர்களின் நலனை பாதிக்கும் பிரச்சனைகளை மட்டும் உடனுக்குடன் அமலாக்கம் செய்து விடும்.

பணமாற்றுச் சலுகைக்கான ஓப்புவிப்பு ஈட்டிய விடுப்பை தொழிற்சங்கங்களுக்கு 9A நோட்டீஸ் கொடுத்து அதன் மீது கருத்துக்களை பெற்று பேச்சுவார்த்தைக்கு அழைக்காமல் கருத்துக்களை பெற்றதும் உடனடியாக நிறுத்தி வைப்பதற்கான உத்திரவை மின்வாரிய நிர்வாகம் பிறப்பித்தது.

மின்வாரிய நிர்வாகத்தின் இந்த நடவடிக்கையை தொழிலாளர்துறை ஆணையரிடம் தொழிற்தாவாவை எழுப்பினோம். பல்வேறு சங்கங்களும் தொழிற்தாவா எழுப்பி இருந்தார்கள். ஆனால் தொழிலாளர் துறையிடமிருந்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தால், வேறு வழியில்லாமல் நீதி மன்றத்தை நாடினோம்.

நமது வழக்கு கடந்த 18.09.2020 அன்று விசாரணைக்கு வந்த பொழுது, நீதிபதி திரு.வி.பார்த்திபன் அவர்கள்,நமக்கு வாய்ப்பளிக்காமலும், வாரிய தரப்பிலிருந்து எந்தவித பதிலுரையும் கோராமல், ஆரம்ப நிலையிலேயே வழக்கை தள்ளுபடி செய்து ரூ.25,000/- அபராதம் விதித்து அதை முதலமைச்சர் நிவாரண நிதிக்கு செலுத்த உத்திர விட்டார்.

இதனையடுத்து நாம் நமது வழக்குரைஞருடன் ஆலோசித்து மேல்முறையீடு செய்வது என முடிவெடுத்தோம். இதற்கிடையில், தொழிலாளர் துறை அலுவலகத்திலிருந்து, நமது தொழிற்தாவாவின் மீது சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை என நமக்கும், தொழிற்தாவா எழுப்பியவர்களுக்கும் பதில் அனுப்பி உள்ளனர்.

நமது தரப்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் செய்த மேல்முறையீடு, கடந்த 10.02.2021 அன்று தலைமை நீதிபதி சஞ்சிப்பானார்ஜி மற்றும் நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி, ஆகியோர் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

விசாரணையின் இறுதியில் தனி நீதிபதி அவர்களின் உத்திரவுக்கு தடைவிதித்தும், 4 வாரங்களுக்குள் வாரியம் பதிலளிக்க வேண்டும் என உத்திரவிட்டுள்ளனர்.

தீர்ப்பின் நாள் இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## தொழிலாளர் துறை

அனுப்புநர்

திரு. வி.ஜி. ரமேஷ்குமார், B.E.,B.G.L.,
தொழிலாளர் துணை ஆணையர்
(தலைமையிடம்)
தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,
5வது தளம், டி.எம்.எஸ். வளாகம்,
தேனாம்பேட்டை,சென்னை 600 006.

பெறுநர்

பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு,
நெ.27,மசூதி தெரு,
சேப்பாக்கம்,
சென்னை 600 005.

கடித எண்.ப2/ 26566 /2020, நாள்.17 .03.2021.

அய்யா,

பொருள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் – எதிர்– தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு – ஈட்டிய விடுப்பை ஒப்புவிப்பு செய்த காசாக்கி கொள்ளும் உரிமை ஓராண்டுக்கு மறுக்கப்படுவது – தொழிற் தகராறுகள் சட்டப் பிரிவு 2 கே–ன் கீழ் விண்ணப்பம் – தொடர்பாக.

பார்வை 1. தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு, பொதுச்செயலாளரின் கடிதம் நாள். 05.10.2020.
2. சென்னை, உயர்நீதிமன்ற உரிமை மனு எண்.12913/2020–ன் உத்தரவு நாள். 18.09.2020.

*****

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு என்ற தொழிற்சங்கம் சென்னை, உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த உரிமை மனு எண்.12913/2020 என்ற வழக்கில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக நிர்வாகத்தின் செயல்முறைகள் எண்.129, நாள் 24.08.2020–ல் ஒரு வருடத்திற்கு விடுப்பு சம்பளத்தை சரண் செய்வதை நிறுத்தி வைத்து ஆணையிட்டதை இரத்து செய்ய கோரியுள்ளது.

சென்னை, உயர்நீதிமன்ற உரிமை மனு எண்.12913/2020–ன் மீதான சென்னை உயர்நீதிமன்ற 18.09.2020 நாளிட்ட உத்தரவில் " Hence, the Writ Petition is dismissed at the admission stage itself with a cost of Rs.25,000/- payable by the Association to the Chief Minister Covid-19 Relief Fund within a period of two weeks from the date of receipt of a copy of this order. In case the cost is not paid, the same is to be recovered by initiating proceedings under the Tamil Nadu Revenue Recovery Act with appropriate interest payable the due date. The Registry is directed to mark a copy of this order to the District Collector of Madras for taking follow up action. No costs. Consequently connected miscellaneous petitions are closed" என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, தொழிற்சங்கத்தின் கோரிக்கை மீது இவ்வலுவலகத்தில் மேல் நடவடிக்கை எடுக்க ஏதுமில்லை என்ற விவரம் தொழிற்சங்கத்திற்கு தெரிவிக்கப்படுகிறது.

17/3/2021

தொழிலாளர் துணை ஆணையருக்காக
(தலைமையிடம்)

17/03/2021

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

( Civil Appellate Jurisdiction )

Wednesday, the Tenth day of February Two Thousand Twenty One

PRESENT

THE HON'BLE MR JUSTICE SANJIB BANERJEE, THE CHIEF JUSTICE

AND

THE HON`BLE MR JUSTICE SENTHILKUMAR RAMAMOORTHY

WA.NO.1091 OF 2020

CENTRAL ORGANISATION OF TAMIL NADU, [ PETITIONER ]
ELECTRICITY EMPLOYEES (COTEE),
NO.27, MOSQUE STREET, CHEPAUK
CHENNAI-600005.

Vs

1 THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR, [ RESPONDENTS ]
TAMILNADU GENERATION AND DISTRIBUTION
CORPORATION LTD., (TANGEDCO),
144, ANNA SALAI,
CHENNAI-600002.

2 THE SECRETARY
TAMILNADU GENERATION AND DISTRIBUTION
CORPORATION LTD., (TANGEDCO),
144,ANNA SALAI,
CHENNAI-600002.

3 THE ASSISTANT COMMISSIONER
OF LABOUR (CONCILIATION),
DMS COMPOUND,TEYNAMPET,
CHENNAI-600018.

Appeal under Clause 15 of the letters Patent against the order of the HON`BLE MR JUSTICE V.PARTHIBAN dated 18.09.2020 and made in the exercise of the Special Original Jurisdiction of the High Court in the Writ Petition No.12913 of 2020 (in WA.NO.1091 OF 2020).

Order : This petition coming on this day for hearing upon perusing the petition and the affidavit filed in support thereof and upon hearing the arguments of MR.N.G.R.PRASAD for M/S.ROW AND REDDY, Advocate for the petitioner and of MR.KARTHICH RAJAN, Advocate for the first and second respondents, the court made the following order:-

The respondents say that since the writ petition was disposed of at the admission stage without calling for any affidavits, if

Eh0087811

the merits are addressed at the appellate stage, the factual aspect of the matter needs to be dealt with by the respondents.

The respondents should file their counter-affidavits within four weeks from date.

List the matter on 9.6.2021. The order for costs will remain stayed pending disposal of the appeal.

-sd/-
10/02/2021

/ TRUE COPY /

K. Manjula 15/2/2021.
Sub-Assistant Registrar ( Statistics / C.S. )
High Court, Madras - 600 104.

TO

1 THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR,
TAMILNADU GENERATION AND DISTRIBUTION
CORPORATION LTD., (TANGEDCO),
144, ANNA SALAI,
CHENNAI-600002.

2 THE SECRETARY
TAMILNADU GENERATION AND DISTRIBUTION
CORPORATION LTD., (TANGEDCO),
144,ANNA SALAI,
CHENNAI-600002.

3 THE ASSISTANT COMMISSIONER
OF LABOUR (CONCILIATION),
DMS COMPOUND,TEYNAMPET,
CHENNAI-600018.

C.C. to M/S.ROW AND REDDY Advocate SR.NO.771

Order
in

WA.NO.1091 OF 2020

Date :10/02/2021

From 26.2.2001 the Registry is issuing certified copies of the Interim Orders in this format
UM (12.02.2021)

HIGH COURT OF JUDICATURE
MADRAS
S. R. No. 77/2021
Carbon Copy application made 11/2/2021
Application Returned.........200
Application Represented.........200
Copy made ready 15/2/2021
Copy delivered 16/2/2021

16/2/2021 Section Officer
C.C.C. Section

Eh0087812



# பொதுத்துறைகளை பாதுகாக்க மக்களிடம் உரையாடுவோம்!

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்திய மக்களின் வளர்ச்சிக்கு மிகவும் காரண காரணிகளாக இருந்தவை பொதுத்துறைகள் மட்டுமே. பொதுத்துறைகள் இல்லையென்றால் இந்தியா வளரும் நாடுகளின் பட்டியலில் இருக்க வாய்ப்பே இருந்திருக்காது. எனவே தான் இந்தியாவின் முதல் பிரதமர் திரு.ஜவஹர்லால் நேரு கலப்பு பொருளாதார முறையை கடைபிடித்தார். சோவியத் யூனியன், ஆதரவுடன் பெரிய இரும்பு எஃகு தொழிற்சாலைகளும், கப்பல் கட்டும் தொழில் நுட்பமும், இதர பலதொழிற்சாலைகளும் கொண்டு வரப்பட்டன. கனடா தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நீர் மின் உற்பத்தி நிலையங்கள் உருவாக்கப்பட்டது. அமெரிக்க தொழில்நுட்பத்தை பயன்படுத்தியும் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டன. இந்தியாவில் முதல் ஐந்து ஐந்தாண்டு திட்டங் களில் வேளாண் உற்பத்திக்கும், கனரக தொழிற்சாலைகள் தொடங்கவும், பொதுத் துறைகளை விரிவாக்கவும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இந்திய சுதந்திரம் அடைந்த பிறகு டெல்லியில் உள்ள பிர்லா மாளிகையில் காந்தி தலைமையில் இந்திய பணக்காரர்களின் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பிரிட்டிஷார் விட்டுச்சென்ற பெரிய தொழில்களை நடத்துவதற்கு குறிப்பாக இரயில்வே, நிலக்கரி, போன்ற பெரும் தொழில்களை நடத்துவதற்கு இந்திய முதலாளிகளைக் கேட்டுக்கொண்டார். அப் பொழுது டாட்டா, பிர்லா தலைமையிலான முதலாளிகள் எங்களிடம் தொழில் நடத்த பணம் இல்லை என கையை விரித்து விட்டனர். அதன் பிறகு தான் ஜவஹர்லால் நேரு சோவியத் யூனியனை நாடினார். இது கடந்த கால வரலாறு.

1950 முதல் 1990-ம் ஆண்டு வரை இந்தியாவில் அரசு முதலீடுகள் செய்து பொதுத்துறைகளை உருவாக்கி சுயகட்டமைப் பை வளர்த்து வந்தது. குறிப்பாக மின்சார உற்பத்தியில் மத்திய மாநில அரசுகள் முதலீடு செய்து அனல் மின் நிலையங்கள், அணு உலை மின்சாரம், போன்றவற்றை உருவாக்கினார்கள். வங்கிகள் மூலமாக சிறுகுறு தொழில் முனைவோர் நடுத்தர தொழில் முனைவோர், ஆகியோருக்கு குறைந்த வட்டியில் கடன் கொடுத்து தொழில் வளர்சிக்கு காரணமாக இருந்தது. இதே போல இரயில்வே, விமான சேவை, நிலக்கரி சுரங்கம், கனிமவளம், போக்குவரத்து போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட மத்திய மாநில அரசுகளின் பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கி இந்திய பொருளாதார வளர்ச்சிக்கும், இந்திய மக்களின் மேம்பாட்டுக்கும் முக்கிய காரணமாக பொதுத்துறைகள் விளங்கியது என்றால் அது மிகையாகாது. அது மட்டுமல்லால் ஆண்டுக்கு பல லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து அவர்களின் குடும்பம் சமூகத்தில் ஏற்றம் பெற காரணமாக அமைந்தது.

1991-ம் ஆண்டுக்கு பிறகு GATT ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு உலகமயம், தனியார் மயம், தாராள மயம் என்ற கோட்பாடு இந்தியாவில் காலடி எடுத்து வைத்தது. இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட இந்தியா உலக பணக்காரர்கள் இந்தியாவிற்கு வரவும், இந்திய பணக்காரர்கள் பலர் வெளிநாட்டில் முதலீடு செய்து பெரும் செல்வம் ஈட்டவும் வகை செய்தது.

அதில் முதலீட்டை மலை போல் குவித்தனர். நஷ்டம் வராத தொழில்களை செய்ய அது ஆசைப்பட்டது. பொதுத்துறைகள் மீது இந்திய பணக்காரர்கள் கை வைத்தனர். 1991-ம் ஆண்டு 27 பெரும் பணக்காரர்களைக் கொண்ட இந்தியா தற்போது 1000-க்கும் மேற்பட்ட பணக்காரர்களைக் கொண்ட நாடாக இந்தியா விளங்குகிறது. இந்த உலகமயக் கொள்கையால் நவீன தொழில்நுட்பம் இந்தியாவிற்கு கிடைத்து என்ற ஒரு உண்மை இருந்தாலும், இந்த தொழில் நுட்பத்தால் ஏழைகளின் எண்ணிக்கை பல மடங்கு அதிகமானது. பெறும் பணக்காரர்கள் எண்ணிக்கையும் பல மடங்கு உயர்ந்தது. பணக்காரர்களிடம் குவிந்த செல்வத்தை லாபகரமாக முதலீடு செய்யவே அரசுகளை நிர்ப்பந்தப்படுத்தி வந்தனர். அதன் விளைவு தான் மின்சாரம், வங்கி, இன்சூரன்ஸ், போக்குவரத்து, நிலக்கரி, இரயில்வே, விமானம் போன்ற அனைத்து துறைகளையும் தனியாருக்கு விட வேண்டுமென்று மத்திய அரசு தீவிரம் காட்டுகிறது. மத்திய அரசு என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாக இருந்தாலும் அது நம்நாட்டு பெருமுதலாளிகளின் பொம்மை அரசாகவே செயல்பட்டு வருகிறது. சுருங்கச் சொன்னால் மத்திய அரசை உருவாக்குவதும், தனக்கு சாதகமில்லாத அரசை தோற்கடிப்பதும் இந்திய பெருமுதலாளிகள் செய்து வரும் தொடர் வேலையாகும்.

பொதுத்துறைகளை விற்க அரசு முற்படும் போது தொழிலாளர்கள் போராட்டம் செய்து அரசுக்கு எதிராக போர்க்கொடி தூக்குகின்றனர். இந்த சூழலில் மத்திய அரசு மற்றும் இந்திய பெருமுதலாளிகளின் கையில் இருக்கும் ஊடகங்கள் பொதுத்துறை நிறுவன ஊழியர்களை மக்களிடம் தவறாக சித்திரிக் கின்றனர். அதாவது பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் செய்யும் வேலையை விட 3 மடங்கு ஊதியம் பெறுவதாகவும் அவர்களை விட திறமை அதிகமாக உள்ள ஊழியர்களுக்கு 3-ல் ஒரு பகுதியே சம்பளம் வழங்கப்படுவதாகவும் மக்களிடம் பறைசாற்றகின்றனர். அரசாங்க நிதியில் பெரும் பகுதியை அரசு ஊழியர்களின் சம்பளத்திற்கும், பென்சனுக்கும் செலவிடப் படுவதாகவும், அதே நேரம் தனியார் துறை ஊழியர்களுக்கு பென்சன் வழங்கப்படுவ தில்லை என்றும் ஊடகத்தில் விவாதித்து, மக்கள் மத்தியில் கொண்டு சென்று அரசு ஊழியர்கள், பொதுத்துறை ஊழியர்களை தவறாகச் சித்திரிக்கிறார்கள். அப்படிப்பட்ட கருத்தியல் ஊடகத்தின் துணை கொண்டு எளிதாக மக்களிடம் சேர்க்கின்றார்கள். வறுமையில், வேலை இல்லா திண்டாட்டத்தில், அறியாமையில் உள்ள மக்கள் பலர் இதை உண்மை என நம்புகின்றனர். அரசு ஊழியர்களுக்கு அதிக சம்பளம் வழங்கப் படுகிறது என்று சொல்லும் அரசு, மறுபக்கம் நம்நாட்டு பெரு முதலாளிகளுக்கு ஆண்டுக்கு ரூ. 4 லட்சம் கோடிகள் வரிச்சலுகை வழங்கப் படுகிறது. அது யாருடைய பணம், மக்களது பணமல்லவா என்று கேட்பதற்கு மக்களிடம் போதி கேள்வி ஞானமும், அரசியல் ஞானமும் இல்லை. இதை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு அரசு பொதுத் துறைகளை தனியாருக்கு விட்டே தீருவேன் என்று நடவடிக்கை எடுக்கின்றது.

இந்தியாவின் வளர்ச்சி என்பது பெரும் பணக்காரர்களால் கட்டப்படுவது அல்ல. அது எழை எளிய மக்களால், சிறுகுறு வணிகர்களால், சிறுகுறு தொழில்முனைவோர்களால், விவசாயிகளால், அரசு ஊழியர்களால், கட்டமைக்கப் படுகிறது. அரசின் பயன் 99 சதம் சாமான்ய மக்களுக்கு பயன்பட வேண்டுமே தவிர 1சதத்திற்கும் குறைவாக உள்ள பணக்காரர்களுக்கல்ல. இந்த தேசத்தின் சொத்துக்கள், பொதுத்துறைகள், பெரும் பான்மை மக்களாக உள்ள சாமான்ய மக்களுக்கே பயன் பட வேண்டும். பெரும் முதலாளிகளின் ஊடகத்தில் வரும் செய்திகளை உண்மையாக எண்ணி கருதாமல் அந்த ஊடகமே பெரும் முதலாளிகளின் ஊடகம் என்ற உண்மையை உணர்ந்து சமான்ய மக்களால் உருவாக்கப்பட்ட அரசையும், அரசின் பொதுத்துறை நிறுவனங்களையும் வங்கி, இன்சூரன்ஸ், போன்ற இதர பொதுத்துறை நிறுவனங்களையும் பாதுகாக்க நாம் ஓரணியில் திரள வேண்டும். பொதுத்துறைகளை அதானிக்கும், அம்பானிக் கும் விடக்கூடாது என்று மக்களோடு மக்களாக உரையாட வேண்டும். இந்த உரையாடல் ஊடகத்தின் பொய் செய்திகளை முறியடித்து தேசத்தின் சொத்துக்கள் நமது சொத்துக்களாக என்று எண்ணி அமையும் உரையாடலாக இருக்க வேண்டும். அரசுத்துறைகளும், பொதுத் துறைகளும் நாடு வளர்ச்சி பெறுவதற்காக உருவாக்கப்பட்டது. மக்களின் பொருளாதாரம் வளர்வதால் நாடு வளரும் என்ற சித்தாந்தத்தை கொண்டு அமைக்கப்பட்ட நமது அமைப்பை தனியார் கொள்ளை இடுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று இந்தியாவின் 120 கோடி மக்கள் உரையாடினால் அந்த உரையாடல் வீரியமிக்க தாக இருக்கும். ஊடகத்தை வென்ற உரையாடலாக இருக்கும். வீரியமிக்க இந்த உரையாடல் தமிழகத்தின் தலை எழுத்தை மட்டுமல்ல, இந்தியாவின் தலையெழுத்தையே மாற்றிக்காட்டும்.

உரையாடுவோம்
மின் துறை உள்ளிட்ட
பொதுத்துறைகளை பாதுக்க
உரையாடுவோம்....

**- தி.ஜெயசங்கர்**



# எங்கள் துயரங்கள் சொல்லிமாளாதவை!

சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்காக மேற்குவங்கம் சென்றபோது ஏற்பட்ட சிறுவிபத்தால் தோழர் யெச்சூரிக்கு முதுக்குத்தண்டில் அடிபட்டது. அதற்காகத் தொடர்ந்து சிகிச்சைபெற்று ஓய்வில் இருக்க வேண்டியது அவசியமாகியது.

ஆனால் அகில இந்தியப் பொதுச்செயலாளர் என்ற முறையில் ஐந்து மாநில சட்டமன்றப் பணிகளுக்காகத் தொடர்பயணத்தில் இருக்க வேண்டிய தேவையிருந்தது. ஒரு வார ஓய்வுக்குப்பின் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தார்.

அடுத்த வாரம் தமிழகத்தில் கோவை, திருப்பூர், சேலம் ஆகிய இடங்களில் பிரச்சாரத்தை முடித்து, சென்னைக்கு வந்து கட்சியின் மாநிலக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார். கூட்டத்தினூடேயே பரிசோதனைக் காக மருத்துவமனைக்குச் சென்றுவந்தார்.

கூட்டம் முடிந்ததும் டில்லி புறப்பட்டார். சென்னையிலிருந்து டில்லிக்குச் சென்ற விமானப் பயணத்தில் தோழர் செச்சூரியுடன் நானும் சென்றேன்.

அவரால், தான் கொண்டுவந்த சூட்கேஸைத் தூக்கி மேலே வைக்க முடியவில்லை. இரண்டு வரிசைக்கு அப்பால் இருந்த நான் உடனே வந்து உதவிசெய்தேன். அவருக்கு அருகில் இருந்த பயணியிடம் பேசி, எனது இருக்கைக்கு மாற்றி உட்காரச் சொல்லி நான் அவர் அருகில் உட்கார்ந்துகொண்டேன்.

விமானம் ஓடுபாதையில் ஓடத்தொடங்கிய போது அந்த அதிர்வால் முதுகுத்தண்டில் ஏற்படும் வலிதாங்க முடியாமல் மனிதர் துடித்துப் போனார். அப்பொழுதுதான் அவரது முதுகுத்தண்டில் போடப்பட்டிருந்த கட்டினை தொட்டுப்பார்த்தேன்.

அதற்குப்பின் இரண்டரை மணிநேரப் பயணம். வலிபொறுக்க முடியாமல் அவரையும் மீறி முனகலொசை வெளிவந்துகொண்டே இருந்தது. தனது கைப்பையில் சிறு தலையணை ஒன்றைக் கொண்டு வந்திருந்தார். ஆனால் அது மட்டும் போதுமானதாக இல்லை. நான் விமானப் பணிப்பெண்ணிடம் பேசி மெதுவான போர்வையை வாங்கித் தந்தேன். இரண்டையும் முதுகுப்புறமாக வைத்து வலியைச் சற்றே குறைக்க முயன்றார். ஆனால் அதற்கெல்லாம் பலன் இருந்தது போல் தெரியவில்லை.

நான் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக முதுகுவலிப் பிரச்சனை கொண்டவன். இரு சக்கர வாகனப் பயணத்தை கைவிட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. தொலைதூர சாலைப் பயணத்தை மிகக் குறைத்துக் கொண்டேன். புகைவண்டிப் பயணம் மட்டுமே. முதுகுதண்டு உமிழ்நீரைப்போல வலியை விடாது சுரக்குந்தன்மை கொண்டது. தோழர் யெச்சூரியின் அந்த முனகல் ஓசை எனது உடம்புக்குள் வலியாகவே பரவிக்கொண்டிருந்தது. முழுப் பயணத்தையும் நரகவேதனையை அந்த மனிதர் அனுபவித்துக் கொண்டிருந்தார். எதுவும் செய்ய முடியாமல் அருகில் இருந்தேன் நான்.

எனது எண்ணம் முழுக்க விமானம் ஓடுபாதையில் இறங்கும் பொழுது ஏற்படும் அதிர்வால் உருவாகும் வலியை எப்படி பொருத்துக் கொள்ளப் போகிறார் என்பதைப் பற்றியே இருந்தது. இதை எழுதும் போதும் கண்களில் நீர்பெருகுகிறது.

நம்மை வசீகரித்த, நம்மை ஆட்கொண்ட தலைவர்களின் கண்களில் நீர்பெருகுவதைப் பார்க்கக் கிடைக்காதவனே பாக்கியவான். நான் அந்தப் பாக்கியமற்றவன்.

டில்லி விமானநிலையதில் இறங்கினோம். அவரது உடமைகளை அவரின் வாகனம் வரை கொண்டு சென்று வைத்து, அவரை ஏற்றி அனுப்பி வைத்தேன்.

உடன் வந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சொன்னார், "இது போன்ற உதவிகளை இடதுசாரிகள் செய்ய மாட்டீர்கள், உங்கள் தலைவர்கள் செய்யவும் அனுமதிக்க மாட்டார்களே? இப்பொழுது எப்படி....?" என்றார். நான் தோழர் யெச்சூரியின் உடல்நிலையைப் பற்றிச் சொன்னேன். அவருக்கு அருகில் இருந்த தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப் பாண்டியன் சொன்னார் "இந்தத் தியாகந்தான் தன்னலமற்ற தலைவர்களாக கம்யூனிஸ்டுகளை என்றைக்கும் வணங்க வைக்கிறது".

நான் எனது வாகனத்தில் ஏறியவுடன், முதலில் தொலைபேசியில் அழைத்தது மாநிலச் செயலாளர் தோழர் கே. பாலகிருஷ்ணன் அவர்களை. "இவ்வளவு மோசமான முதுகுவலியோடு இருக்கும் தோழரை, கோவை- திருப்பூர்- சேலம் - சென்னை என்று ஏன் பயணப்பட வைக்க வேண்டும்" என்று எனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினேன்.

15 நாள்கள் கூட ஆகவில்லை. திண்டுக்கல் தொகுதி பிரச்சாரத்துக்கு மீண்டும் தோழர் யெச்சூரி வந்தார். முதுகுத்தண்டு வலி 15 நாள்களில் சரியாகும் ஒன்றன்று. இன்னும் சொல்லப்போனால் முதுகில் போடப்பட்ட கட்டினைக்கூட பிரித்திருக்க மாட்டார்கள். ஆனால் அதற்குள் நெடும் பயணம், வலி அந்த மனிதரை என்ன பாடுபடுத்தும் என்பதை நினைத்து உள்ளுக்குள் பதட்டத்தில் இருந்தேன்.

இம்முறை அவருக்கு உதவியாக அவரது மூத்த மகன் வந்திருக்கிறார் என்று தோழர்கள் சொன்னார்கள். மனதுக்கு சற்று ஆறுதலாக இருந்தது. அதே நேரத்தில் வலியை அவர் எவ்வளவு உணர்ந்து கொண்டிருக்கிறார் என்பதும் புரிந்தது.

ஆனால் இன்று காலை வந்த செய்தி நிலைகுலைய வைத்துவிட்டது. டில்லியில் கொரனோ - சிக்கிச்சையில் இருந்த அவரது மூத்த மகன் ஆசிஷ் இறந்துவிட்டார் என்று.

என்ன சொல்வது, என்ன எழுதுவதென்று தெரியவில்லை.

தன் மகனுக்குச் சிகிச்சை அளித்த மருத்துவர் கள், செவிலியர்கள், மருத்துவ ஊழியர்களுக்கு நன்றி சொல்லிப் பதிவிட்டிருக்கிறார் தோழர் யெச்சூரி. அவரின் கைகளை இறுகப் பற்றிக்கொள்கிறேன்.

முதுலிலும் இதயத்திலும் ஆரா ரணம் இருந்தாலும் கடந்து பயணிப்பீர்கள் தோழர். உங்களிடம் நாங்கள் கற்றது அதனைத்தான்.

---

தோழர்களே

இது தோழர் சு. வெங்கடேசனின் (எம்.பி) பதிவு. ஆனால் நாம் எப்படி இருக்க வேண்டும் என கற்றுத் தந்த பதிவு

---

# வருந்துகிறோம்



தோழர் **ஆர். சந்திரசேகர்,** கணக்கீட்டு ஆய்வாளர், முகலிவாக்கம், கிண்டி கோட்டத் தலைவர், தென்சென்னை 1 அவர்கள் 30.4.2021 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



வடசென்னை அனல் மின்நிலையத்தில் மின்துறை பொறியாளர் அமைப்பின் செயலாளர் தோழர் **கிருபாகரன்** அவர்கள் 23.4.2021 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



# கொரானா நோய் தொற்றும்... வென்று நிற்கும் விஞ்ஞானமும்

- தி.ஜெயசங்கர்

கொரானா நோய் தொற்று இரண்டாவது அலை நாடு முழுவதும் வேகமாக பரவி வருகிறது. முதல் அலையைவிட இரண்டாவது அலை வேகம் மட்டுமல்ல, ஆபத்து நிறைந்த வைரஸாகவும் காணப்படுகிறது. 2019 டிசம்பர் மாதம் கொரானா நோய் தொற்றுகண்டு பிடிப்பக்கப்பட்ட போது உலகமுழுவதுமுள்ள மருத்துவ விஞ்ஞானிகள் இதன் தாக்கம் மூன்றாண்டுகள் இருக்குமென கணித்தனர். இந்தச் சூழலில் தொற்று நோய்க்கு மருந்து கண்டு பிடிக்க உலகம் முழுவதும் 120-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதிலும் குறிப்பாக இந்தியாவில் சீரம் இன்ஸ்ட்டியூட் நிறுவனமும், பாரத் பயோடெக் நிறுவனமும், தடுப்பூசிகளை கண்டு பிடித்துள்ளது உலக மக்களுக்கு சற்று ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

கோவிட் பெருந்தொற்று ஏற்பட்ட போதும் இதற்கு முன்பாக கொள்ளை நோயால் உலகம் பாதிக்கப்பட்ட போதும் மருத்துவர்களும், விஞ்ஞானிகளுமே இந்த உலக மக்களை காப்பாற்றினார்கள் என்ற உண்மையை மறந்து விட இயலாது. அன்றும் இன்றும் உலகத்தை காப்பாற்றும் பெரும் பொறுப்பை அறிவியலே ஏற்று இருக்கின்றது. இறுதி உண்மை என்பது விஞ்ஞானிகளால், அறிவியலால் மட்டுமே நம்மை காப்பாற்ற முடியும் என்பது தான். ஆனால் அறிவியலுக்கு எதிரான அதன் எல்லையை கேள்விக்கு உட்படுத்துவார்கள். அதை ஒரு நாளும் ஏற்றுக்கொள்வதில்லை.

450 ஆண்டுகளுக்கு முன்பு இத்தாலியை சேர்ந்த வானவியல் அறிஞர் கலிலியோ அவர்கள் உலகம் உருண்டையானது, வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது போல தட்டையானது அல்ல என்று கூறினார். தனது கூற்றுக்கு அறிவியல் பூர்வமான விளக்கங்களையும் தேவசபையில் கொடுத்தார். இருப்பினும் மதவாதிகள் அதை ஏற்றுக் கொள்ளாமல் அவரை துன்புறுத்தி சிறையில் அடைத்து கொடுமை செய்தது. இறுதியில் அவர் கொல்லப்பட்டார். எந்த சபையினால் அவர் கொல்லப்பட்டரோ அதே சபை 450 ஆண்டுகள் கழித்து அவருடைய மரணத்திற்கு வருத்தம் தெரிவித்து, தேவசபை கூறிய நீதி தவறானது என்று மன்னிப்பு கேட்டது. விஞ்ஞானத்தை யாராலும் தோற்கடிக்க முடியாது என்பதற்கு கலிலியோ ஒரு மிகப்பெரிய சான்று.

அமெரிக்காவின் மிகப்பெரிய விஞ்ஞானி அமெரிக்காவிற்கு அதி நவீன விஞ்ஞான கருவிகளை உருவாக்கித்தந்தவர் ஆல்பர்ட் என்ஸ்டின். இரண்டாம் உலகப்போரின் போது ஐப்பான் மீது அணுகுண்டுகளை வீசுவதற்கு இவருடைய கண்டு பிடிப்பை அமெரிக்கா பயன்படுத்திக் கொண்டது. அவரிடம் ஊடகவியலார் ஒருவர் கடவுள் இருக்கின்றாரா என்ற கேள்வியைக் கேட்டார். அதற்கு அவர் அளித்த பதில் அனைவரையும் வியக்கச்செய்தது. அதாவது கடவுள் வருவார், அவர் நம்மை காப்பாற்றுவார் என்று அவரை தொல்லை செய்யாமல் அந்த நேரத்தில் நம்வாழ்க்கைக்கு, தேவையான உழைப்பை முதலீடு செய்வதன் மூலம் நாம் சிறப்பாக வாழ முடியும் என்று தெரிவித்தார்.

கடவுளை அழைப்பதற்காக கடவுள் மனிதனை படைக்கவில்லை என்று கூறினார். ஊடகவியலாருக்கு குழப்பமானது. நீங்கள் என்ன சொல்ல வருகின்றீர்கள் என்று கேட்டார். கடவுளை அழைப்பது உன் வேலையல்ல, நீ உன் கடமையை செய் என்று மீண்டும் சொன்னார். கடவுள் இல்லை என்பதை எதார்த்தமாக உழைப்போடு ஒப்பிட்டுச் சொன்னார் ஆல்பர்ட் என்ஸ்டின்.

பெருந்தொற்று உச்சக்கட்டத்தில் இருக்கும் இந்த வேளையில் ஆர்.எஸ்.எஸ். சாமியார்கள், இந்துத்துவா அமைப்புகள் ஹரித்துவாரில் 5 லட்சம் பேர் கலந்து கொண்ட கும்பமேளாவை அரசு அனுமதியுடன் நடத்தியுள்ளார்கள்.

இவ்வளவு பேர் கூடினால் இந்தியா முழுவதும் நோய்தொற்று வேகமாக பரவுமே என்று கேட்டதற்கு பி.ஜே.பி மந்திரி அம்ரீத்தர் சிங் அவர்கள் புனித கங்கையில் நீராடினால் கொரானா நோய் மட்டுமல்ல, எல்லா நோயும் காணாமல் போகும். அவ்வளவு சக்தி வாய்ந்தது கங்கையின் புனிதநீர் என்று சொன்னார். கும்பமேளா முடிந்தது, டெல்லி, மும்பை, உ.பி. உத்தராஞ்சல். உத்தரகாண்ட், மத்திய பிரதேசம், குஜராத் போன்ற மாநிலங்களில் கொரானா நோய் தொற்று வேகமாக பரவி உயிர் இழப்புகள் ஏற்பட்டு வருகிறது. எண்ணற்ற மதத்தலைவர்கள் உயிருக்கு பயந்து மாட்டு கோமியத்தை குடித்தால் இந்த நோய் தீராது என்று உணர்ந்து மருத்துவமனையில் சிகிக்சை பெற்று வருகின்றார்கள். இவர்களின் பேச்சைக்கேட்டு கும்பமேளாவிற்குச்சென்ற அப்பாவி பொது மக்கள் பலர் இறந்து போனார்கள். பலர் உயிருக்கு போராடி வருகிறார்கள். சாமியார்கள், யோகா குருக்கள் எல்லாம் பெரும் கார்ப்பரேட் மருத்துமனைகளை நடத்தி வருகின்றார்கள். மறுபுறம் பசுமாட்டு கோமியத்தை குடித்தால் நோய்கள் தீரும் என்ற மூடநம்பிக்கையும் பரப்பி வருகிறார்கள். இந்த மூட நம்பிக்கைகள் தான் இந்துத்துவாதிகளின் ஆகபெரும் சொத்து அதை அவர்கள் புராண கதைகள் சொல்லி காப்பாற்றி வருகின்றார்கள்.

மத்திய மந்திரி ராம்தாஸ் அத்வாலே மும்பையில் **“கோ கொரானா கோ”** என்று கோஷம் போட்டு வைரஸின் காதை செவிடாக்கப் பார்த்தார். பிரக்யாசிங் தாக் கூர் என்பர் தினமும் 5 முறை **“அனுமன் சலிசா”** மந்திரத்தை சொல்லி வந்தால் உலகத்தில் இருந்தே கொரானா போய் விடும் என்று கூறி உலக விஞ்ஞானிகளை யெல்லாம் இந்தியாவின் பக்கம் திரும்பி முகம் சுளிக்க வைத்தார்.

108 முறை நமோ நாராயணா என்று சொன்னால் கொரானா ஓடிவிடும் என்று ஸ்ரீவில்லிபுத்தூர் ஜுயர் திருவாய் மலர்ந்தார். ஆனால் நாராயணனை தரிசித்தவர்களின் கதி என்னவென்று உலகிற்கே தெரியும். கொரானா நோய் தொற்று தீவிரமடைந்த காரணத்தினால் அனைத்து தேவாலாயமும் மூடப்பட்டுள்ளது. கடவுளுக்கே லாக்டவுன் போட்டது கொரானா நோய் தொற்று. இவற்றையெல்லாம் அறிந்து கொண்டு மக்கள் அறிவியலின்பால் நிற்க வேண்டுமே தவிர மூடநம்பிக்கைகளின் பின்னால் ஒளிந்து கொள்ளக்கூடாது.

எளிதாகச் சொன்னால் தன்னுடைய உயிர் என்று வரும் போது அலோபதி மருத்துவத்தையும் அடுத்தவன் உயிர் என்று வந்தால் பசுமாட்டு கோமியத்தையும் குடிக்கச் சொல்வது தான் பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ் இரட்டை வேடம். அறிவியலால் மட்டுமே, விஞ்ஞானிகளால் மட்டுமே இந்த உலகை காப்பாற்ற முடியும் என்பதை நாம் உணர வேண்டும். எந்த கடவுளும் எந்த கோயிலிருந்தும் காப்பாற்ற முடியாது என்பதை கொரானா கண்ணத்தில் அடித்தாற் போல் சொல்லிக் கொண்டே இருக்கிறது.

கடவுள் நம்பிக்கை என்பது வேறு விஞ்ஞானம் வேறு என்று சொல்பவர்கள் விஞ்ஞானத்தை புறந்தள்ளி விட்டு வாழ இயலாது என்பதையே கொரானா நோய் தொற்று நமக்கு உணர்த்துகிறது. கொரானா மட்டுமல்ல, மதவாதி களும் ஆன்மிகவாதிகளும் அதையே நமக்கு எடுத்துரைத்துக் கின்றார்கள்.

மதங்களை விட, கடவுள் நம்பிக்கையை விட மனிதனுக்கு அவசியமாக இருக்க வேண்டியது. மனிதம் என்ற புனிதத்தன்மையே. மனிதத்தை யார் பெற்றிருக்கிறார்களோ, அவர்கள் இப்பூவலகின் புனிமான ஆத்மாக்கள். கொரானா வை எதிர்த்துப்போராடுகின்ற பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள், முன்களப்பணியாளர்கள் போன்ற அனைவரும் புனிதத் தன்மையானவர்கள். கொரானாவுக்கு எதிரான இந்திய மக்கள் நடத்தும் போராட்டம் அடுத்த நகர்வில் ஆளும் பாஜக அரசை ஆட்சியில் இருந்து அகற்றும் போராட்டமாக இது மாற இருக்கின்றது. அத்தகைய போராட்டத்தில் நாம் வலுவாக தலையீடு செய்து நமக்கான அரசை கட்டி எழுப்புவோம்.



# கேங்மேன் பணியாளர்கள் சொந்த ஊருக்கு செல்ல வாரிய உத்தரவு எண் 7 நாள் 08.03.2019-ஐ மாற்றிடுவோம்!







மின்வாரியத்தில் அவ்வப்போது புதிய புதிய உத்தரவுகளை மின்வாரியம் வெளியிட்டு வருகிறது. மின்வாரிய தொழிலாளர்களின் பணி நிலைகள் தொடர்பாக பல்வேறு உத்தரவுகளை தலைமைப் பொறியாளர் அவர்கள் வெளியிட்டு வருகிறார்கள். குறிப்பாக ஊர் மாற்றல் உத்தரவில் அவ்வப்போது மாற்றங்களை செய்து வாரியத்தால் உத்தரவு வெளிவந்த வண்ணம் உள்ளது.

இது தொடர்பாக தொழிற்சங்கங்களிடம் எந்த பேச்சுவார்த்தையும் நடத்தப்படுவதுமில்லை. கருத்துக்களைக் கேட்கப்படுவதுமில்லை. இதனால் மின்வாரிய நிர்வாகம் வெளியிடுகின்ற உத்தரவுகளில் அறைகுறை உத்தரவுகளாகவே வெளிவருகிறது. புதிய நியமனங்கள் தொடர்பாக உத்தரவுகள் வெளிவருகின்ற பொழுது தொழிற்தகராறு சட்டப்படி 9A நோட்டீஸ் அளித்து தொழிற்சங்கங்களிடம் கருத்துக்களை கேட்க வேண்டுமென்ற ஷரத்து மின்வாரிய நிர்வாகத்தால் அமலாக்கம் செய்யப்படவில்லை. இது தொடர்பாக தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு ஆரம்ப நிலையிலேயே தனது ஆட்சேபனை கடிதத்தை மின்வாரியத்திற்கு அளித்துள்ளது.

மின்வாரிய ஆணை எண் 7 நாள் 08.03.2019-ல் உள்ள ஷரத்தானது புதிய பணி நியமனம் செய்யும் போதும், உள்முகத் தேர்வில் ஊழியர்கள் தேர்வு செய்யப்படும் போதும் அவர்கள் பணியில் சேர்ந்த இடத்தில் ஐந்தாண்டுகள் பணி புரிந்தால் மட்டுமே வட்டம் விட்டு ஊர் மாற்றம் செல்ல இயலும், மின் வட்டத்திற்குள்ளேயே இடம் மாற்றம் வேண்டுமெனில் மூன்றாண்டுகள் காத்திருக்க வேண்டுமென்ற உத்தரவை வழங்கியது. பணியாளர் அவரின் சொந்த மாவட்டத்திற்கு செல்ல 5 ஆணடுகள் காத்திருக்க வேண்டும் என்பது இந்த உத்தரவின் சாரம்சமாகும். இது எந்த வகையிலும் பொருத்தமற்றது. தமிழகம் முழுவதும் அனைத்து மின் வட்டங்களிலும், அனைத்து பதவிகளும் பெரும்பான்மையாக காலிப்பணி இடங்களாக உள்ள நிலையில் குறிப்பாக தேர்வு செய்யப்படும் பணியாளர் வசிக்கும் மாவட்டத்திலேயே பதவிகள் காலிப்பணி இடங்களாக இருந்தும், வேறு மின் வட்டங்களுக்கு மின்வாரிய நிர்வாகம் பணிநியமன உத்தரவு வழங்கியுள்ளது.

புதிய பணி நியமனங்களை பெருகின்ற ஊழியர்கள் தனது குடும்பத்தை விட்டு வேறு மின் வட்டங்களில் பணி செய்கின்ற போது அவர்கள் பெரும் வேதனைக்குள்ளாகின்றனர். திருமண மானவர்கள் குடும்பத்தை அழைத்துச் செல்ல முடியாமலும், பணியாளர் தினம் வந்து செல்ல முடியாத நிலையும் ஏற்படுகின்றது. வாங்கும் சம்பளத்தில் பெரும்பகுதி வேறு மாவட்டத்தில் பணி செய்வதற்காகவே செலவிடப்படுகிறது என்பது வேதனைக்குரிய விஷயமாகும். அதிலும் குறிப்பாக கேங்மேன் பணியாளர்களுக்கு

தொகுப்பூதியம் ரூ.15000/- கையில் வாங்கும் சம்பளம் ரூ. 14,400/- இந்த சம்பளத்தில் அவர் தனது குடும்பத்தையும் பராமரிக்க வேண்டும். வெளி மாவட்டத்தில் தங்குவதற்கு, உணவு, மற்ற செலவினங்களையும் அவர் தனது சம்பளத்தில் ஈடுசெய்ய வேண்டுமென்பது இயலாத காரியம். ரூ.15,000/- சம்பளம் பெறும ஊழியர் 5 ஆண்டுகளுக்கு இது தொடர வேண்டுமென்பது ஏற்புடையதல்ல. ஏற்கனவே சமூகத்தின் அடிமட்டத்தில் இருந்து வந்த கேங்மேன் பணியாளர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் அனுப்பி அவர்களின் வாழ்க்கையில் துன்பத்தையும், துயரத்தையும் ஏற்படுத்தியிருப்பதை ஏற்க முடியாது. மின்வாரிய சட்டங்களும், திட்டங்களும் நன்மை செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்டது.

அவ்வாறிருக்க நியமனம் செய்யப்பட்ட கேங்மேன் பணியாளர்களில் 5000-க்கும் மேற்பட்ட ஊழியர்களை வெளி மாவட்டங்களுக்கு நியமித்தது நியாயமல்ல. இதை மத்திய அமைப்பு ஏற்காது. இதை மாற்றிக்காட்டுவதற்கு புதிய ஆட்சி பொறுப் பேற்றவுடன் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வோம். தமிழக அரசு நமது கோரிக்கையை ஏற்கும் என நம்புகிறோம். தேவை ஏற்பட்டால் கேங்மேன் பணியாளர்களை ஒன்று திரட்டி மின்வாரியத்தை எதிர்த்து மிகப்பெரிய போராட்டத்தை நடத்துவோம்.

"வாரிய ஆணை எண் 7ஐ திரும்பப்பெற வேண்டும் கேங்மேன் பணியாளர்கள் சொந்த ஊருக்குச் செல்ல வேண்டும்"

**- தி.ஜெயசங்கர்**

# தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பு அமைப்பு தினம் ஏப்ரல் 30

இந்திய நாடு முழுவதும் சமூக அக்கறையோடு சேவை மனப்பான்மையோடு தரமான மின்சாரம் தடையில்லா மின்சாரம் என நுகர்வோர்களுக்கு வழங்கி வரும் நமது மின்வாரிய பணியாளர்களை ஒன்றிணைத்து சேவைத்துறையான மின்துறையை பாதுகாக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் அமைக்கப்பட்ட அமைப்பு தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்பு (NCCOEEE) 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 30-ல் ஜெய்பூரில் நடைபெற்ற கருத்தரங்கில் எடுக்கப்பட்ட முடிவு தான் இந்த அமைப்பு உருவான வரலாறு,

மத்திய அரசு மின்சார சட்டத்தை கொண்டு வந்து நடைமுறைப்படுத்த முயற்சித்த காலம் அது. மகத்தான தலைவர்கள் தோழர்கள் ஈ.பாலனந்தன், து.ஜானகிராமன், ஏ.பி.பரதன் ஆகியோரின் பெரும் முயற்சியின் காரணமாக உருவாக்கப்பட்ட அமைப்பு. குமரி முதல் இமயம் வரை விரிந்து பரந்த கிடந்த நமது வர்க்கத்தை இணைத்து சாதனை படைத்த 21 ஆண்டுகால வரலாற்றுக்கு சொந்தமான அமைப்பு.

இன்றும், நாட்டின் எந்த மாநிலத்திலாவது மின் ஊழியர்கள் நலன் பாதிக்கப்படுமேயானால் ஒட்டு மொத்த ஊழியர்களும் நாடு தழுவிய அளவில் போராட ஒற்றுமைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. பொதுத்துறைகளை குறிப்பாக அனைத்திற்கும் தாய் தொழிலாளான மின்சார துறையை தனியார் மயமாக்க துடிக்கும் மோடி அரசாங்கத்தின் நடவடிக்கைகளை பின்னுக்கு தள்ளவும், அண்ணல் அம்பேத்கர் அவர்கள் கண்ட கனவான மின்வாரியம் மாநில அரசின் கட்டுப்பாட்டில் சேவைத்துறையாக நீடித்திடவும், பாடுபடுவதோடு, மின்நுகர்வோர்களுக்கு தரமான மின்சாரம் தடையில்லா மின்சாரம், மக்கள் வாங்கும் விலையில் மின்சாரம் என்ற உன்னத நோக்கங்களை முன்னெடுத்து செல்வோம்!

வர்க்க ஒற்றுமையை உயர்த்தி பிடிப்போம்!

மின்துறையை பாதுகாப்போம்!

மின் ஊழியர் - பொறியாளர் - அலுவலர் ஒற்றுமை ஓங்கட்டும்!

# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மகுதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |


பெறுநர்

நாள்: 22.04.2021

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,

வணக்கம்

பொருள் : **நிர்வாகம் - 2900 களஉதவியாளர் பணியிடங்களை நிரப்ப வாரியம் ஆன் லைனில் பதிவு செய்ய அறிவிக்கை வெளியிட்டது - அறிவிக்கையில் உடற்தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே எழுத்து தேர்வில் அனுமதி - பெண்களுக்கு உடற்தகுதி தேர்வில் விலக்கு கோருவது - தொடர்பாக**

பார்வை : **மின்வாரிய அறிவிக்கை எண் 05/2020 நாள் - 23.04.2019**

பார்வையில் கண்ட மின்வாரிய அறிவிக்கையின் படி களஉதவியாளர் 2900 பணியிடங்களுக்கான அறிவிக்கை வெளிடப்பட்டு பிப்ரவரி மாதம் 15.02.2021 முதல் 16.03.2021 வரை ஆன் லைனில் பதிவுகள் நடைபெற்று முடிந்துள்ளது. அடுத்து நடைபெற உள்ள உடற்தகுதி தேர்வில் இருந்து பெண்களுக்கு விலக்கு அளிப்பது அல்லது தளர்வு அளிப்பது தொடர்பாக எங்களது கருத்துகளையும் உடனடி நடவடிக்கையும் எடுக்க கேட்டுக் கொள்கிறோம்.

2900 களஉதவியாளர் பணியிடங்களுக்கு சுமார் 18500 பேர் ஆன் லைனில் பதிவு செய்துள்ளனர். இதில் கனிசமாக பெண்களும் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கான உடற்தகுதி தேர்வு கம்பம் ஏறி கிராஸ் ஆரம் மாட்டுதல், கிரிப்பர் செட் அடித்தல். குறிப்பிட்ட எடையை 100 மீட்டர் தூரம் 60 வினாடிகளில் கடக்க வேண்டும் என்ற மூன்று தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் மட்டுமே எழுத்து தேர்வுக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று வாரிய அறிவிக்கை சொல்கிறது. இந்த உடற்தகுதி தேர்வு ஆண்களுக்கே கடினமான ஒன்று. அவர்கள் கடுமையான பயிற்சி எடுத்தால் மட்டுமே இந்த தேர்வில் வெற்றிபெற முடியும். அவ்வாறு இருக்க பெண்களும் உடற்தகுதி தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என்று சொல்வது இயற்கை நியதிக்கு முரணானதாகும். ஆணின் உடல் பலமும், பெண்ணின் உடல் பலமும் வெவ்வெறு தன்மை கொண்டது.

இந்த பணிக்கு விண்ணப்பித்த பெண்களில் பலர் திருமணமானவர்கள். அறுவை சிகிச்சையின் மூலம் குழந்தை பெற்றுக் கொண்டவர்கள். இவர்களால் கம்பம் ஏறுவது என்பது மிகுந்த சிரமத்தை உருவாக்கும்.

மேலும் பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு என்பத தேர்வில் வெற்றி பெறவில்லை என்றால் ஆண்களை வைத்து நிரப்பப்படும் என்று களஉதவியாளர் அறிவிக்கையில் பக்கம் -4 வரிசை எண் 5-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது பெண்களுக்கான இடஒதுக்கீட்டு முறையை அப்பட்டமாக மீறுவதாக உள்ளது. வேலை வாய்ப்பில் பெண்களுக்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் அளிக்க வேண்டும் என்பதற்காக கொண்டு வந்த 33 சத இடஒதுக்கீட்டை ஆண்கள் அபகரிப்பதாகவே நாங்கள் கருதுகின்றோம். மூளை உழைப்பில் ஆணும் பெண்ணும் சமமாக போட்டி போட முடியும் அதனால்

தான் எழுத்துத் தேர்வுகள் இருபாலருக்கும் ஒன்றாக அகில இந்திய அளவில் உள்ளது. அதே நேரம் 100 மீட்டர் ஒட்ட பந்தயத்தை ஆண்களுக்கு தனியாக போட்டியும் பெண்களுக்கு தனியாக போட்டியும் வைத்து தான் முடிவுகள் அறிவிக்கப்படுகின்றது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

மேலும் கூடுதலாக போட்டி தேர்வுகள் என்பது ஒரு வடிகட்டி. தேர்வு செய்ய அறிவிக்கப்பட்ட 2900 களஉதவியாளர் பதவியில் 33 சதம் பெண்கள் கோட்டாவில் 957 பேருக்கு கட்டாயம் வேலையளிக்க வேண்டும்.

தேர்வான பெண் களஉதவியாளர்களை எம்.ஆர்.டி, சிறப்பு பராமரிப்பு, துணை மின் நிலைய பராமரிப்பு போன்றவைகளில் ஈடுபடுத்த முடியும். மேலும் அடுத்த பதவி உயர்வில் வணிக உதவியாளர் பதவியில் ஈடுபடுத்த வாய்ப்பு உள்ளது. பெண்கள் 957 பேரை தேர்வு செய்ய அவர்களின் உடல் வலிமைக்கு ஏற்ப தேர்வு வைக்க வேண்டுமே தவிர ஆண்களோடு போட்டியிட வைப்பது பெண்களுக்கான வேலை வாய்ப்பினை பறிப்பதாகவே பொருள் கொள்ள வேண்டி வரும் என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் 2900 களஉதவியாளர் (Field Assistent) பயிற்சி பணியிடங்களில் 957 பணிடங்களை 33 சதவீத இடஒதுக்கீடு என்ற முறையில் பெண்களை வைத்தே நிரப்பிட வேண்டும் என்றும், பெண்களுக்கும் உடற்தகுதி தேர்வு ரத்து செய்திட வேண்டும் அல்லது அவர்களின் உடல் வலிமைக்கு தகுந்தாற்போல் உடற்தகுதி தேர்வை தளர்த்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

**நன்றி !**

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்

# களஉதவியாளர் (FA) பயிற்சி மையம் சென்னை

மின்வாரியத்தில் 2900 களஉதவியாளர் (FA) பணியிடங்களை ITI (NTC/NAC) பயின்றவர்களை கொண்டு நிரப்பிட Online -ல் விண்ணப்பங்கள் 15.02.2021 முதல் 15.03.2021 வரை கோரப்பட்டது. அதில் பதிவு செய்தவர்களுக்கான உடற்தகுதி தேர்வு பயிற்சி 27.03.2021 அன்று மத்திய சென்னை வட்டமும், வடக்கு சென்னை வட்டமும் இணைந்து பெரம்பூர் AAசாலையில் உள்ள சங்க மனையில் 27.03.2021 அன்று பயிற்சி மையத்தை துவக்கினர். பயிற்சி மையத்தில் இரண்டு அடுக்கு பாதுகாப்பு வளையத்துடன் நம்பிக்கை அளிக்கும் விதமாக கட்டமைப்புடன் செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

பயிற்சி மையத்தில் தோழர் ஆற்காடு அருண் அவர்கள் பயிற்சியாளராக இருந்து பயிற்சி அளித்தார். மின்கம்பத்தில் தலைகீழாக வேகமாக ஏறி கின்னஸ் சாதனை படைத்த அருண் அவர்கள் சென்னை பயிற்சியாளர் தலைமையில் சுமார் 45 மாணவர்கள் 5 பெண்கள் என 50 பேர் தொடர் பயிற்சி எடுத்து வருகின்றனர்.

மின்வாரிய நிர்வாகம் பிரிவு அலுவலகங்களில் நடைபெறும் பணிகளை தலைமையகத்தில் இருந்து கண்காணிக்க புதிய ERP என்ற சிஸ்டத்தை பயன்படுத்த உள்ளது.

ERP என்றால் ENTERPRISE RESOURCE, PLANNING என்று பொருள்

விண்ணப்ப பதிவு, பணிகள் துவங்கிய விவரம், பணி முடித்த விவரம் எல்லாமே கண்காணிக்கலாம்.

ஏற்கனவே STORE DRAWAL, முடிவுக்கு கொண்டு வந்து விட்டார்கள் இனி WORK ORDER-ம் இல்லை.

எல்லாம் டிஜிட்டல் இந்தியாவின் வளர்ச்சி போலும்,

என்ன தான் இருந்தாலும் மின்வாரிய ஊழியன் கம்பத்தில் ஏறிதான் பீஸ் போட வேண்டும்!

# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

CITU

27, மதுதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |


பெறுநர்

**நாள்: 22.04.2021**

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002
ஐயா,

வணக்கம்

பொருள் : **கோவிட்-19 இரண்டாம் அலை நோய் தொற்று வெகுவேகமாக பரவுதல் முன்னிட்டு - முககவசம் - சானிடைசர் மற்றும் பணியாளர்களின் வருகை - தொடர்பாக**

இந்தியாவில் தற்போது கொரானா நோய் தொற்றின் இரண்டாம் அலை பரவ ஆரம்பித்து விட்டதை தாங்கள் அறிந்ததே! தமிழகத்தில் குறிப்பாக சென்னை, கோவை, திருவள்ளூர் உள்ளிட்ட சில மாவட்டங்களில் நோய் தொற்று தாக்கம் அதிகரித்துள்ளது. இந்த இரண்டாம் அலையில் நமது மின்வாரிய பணியாளர்கள் பாதிக்கப்பட்டு அதில் சிலர் மரணத்தை தழுவி விட்டனர்.

முன் களப்பணியாளர்களாக பணியாற்றி வரும் நமது பணியாளர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் மின்வாரிய நிர்வாகத்திற்கு இருக்கிறது என்ற முறையில் கீழ்கண்ட எங்களது கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கை எடுத்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

1. கொரானா தொற்று இரண்டாம் அலை வெகுவேகமாக பரவுவதால் அனைத்து அலுவலங்களிலும் 50 சதவீத பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியாற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
   குறிப்பாக வாரிய தலைமை அலுவலகத்தில் இருவர் நோய் தொற்றே தெரியாமல் இறந்து போய் உள்ளதை கணக்கில் கொண்டும். பலருக்கு இந்த நோய் தொற்றின் காரணமாக பாதிக்கப்பட்டு விடுப்பில் உள்ளதையும் கணக்கில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
2. அனைத்து அலுவலகங்களுக்கும் கோவிட் 19 முதல் அலையில் முன்பு கொடுத்தது போல சானிடைசர் முகக்கவசம் வழங்கப்பட வேண்டும். அதே போல அனைத்து அலுவலகங்களிலும் கிருமி நாசினி தெளிக்கப்பட வேண்டும்.
3. கணக்கீட்டு பணியாளர்கள் மற்றும் களப்ணியாளர்கள் கடுமையாக பாதிக்கப்படும் சூழல் உள்ளதால் அவர்கள் அனைவருக்கும் முன்னுரிமை அடிப்படையில் முககவசம், சானிடைசர் உடனடியாக வழங்க வேண்டும்.
4. மின்வாரிய பணியாளர்கள் அனைவருக்கும் வயது வித்தியாசமின்றி கோவிட் 19- தொடர்பான தடுப்பூசி போடுவதற்கு அனைத்து வட்ட அலுவலகங்களிலும் ஏற்பாடு செய்ய வேண்டும்.
5. இந்த நோய் தொற்று காலத்தில் நேரடியான ஆய்வு கூட்டங்களை நடத்துவதை அனைத்து அலுவலர்களும் கைவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் இக்கடிதத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்து மின்வாரிய பணியாளர்களின் நலன் கருதி தகுந்த உத்திரவை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**நன்றி !**

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்



# திரை உலகில் ஒரு நட்சத்திரம் உதிர்ந்தது

கலை உலகில் நகைச்சுவை நடிகராக மறைந்த திரைப்பட இயக்குநர் பாலசந்தர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட சின்னக் கலைவாணர் என்று அன்போடு அழைக்கப்படும் விவேக் அவர்கள் 16-ந்தேதி விடியற்காலை 4.30 மணி அளவில் மாரடைப்பின் காரணமாக இறந்து விட்டார். அவருடைய குடும்பதார்க்கு மின் ஊழியர் மத்திய அமைப்பின் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம். திரை உலகில் அடி எடுத்து வைத்த நடிகர் விவேக் அவர்கள் தனக்கென ஒரு பாணியை உருவாக்கி ரசிகர் மத்தியில் நீங்கா இடத்தைப் பெற்றவர். 25 ஆண்டுகளுக்கும் மேலாக திரை உலகில் தடம் பதித்த அவர் மூத்த திரைக்கலைஞர்களுடனும் இன்றைய இளைய தலைமுறை கலைஞர்களோடும் இணைந்து பணியாற்றியவர்.

அனைவரோடும் அன்பாகவும் பாசத்தோடும் எளிமையாக பழகக்கூடிய அவர் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின்பால் ஈடுபாடு கொண்டு அவர் இந்தியா வல்லரசாக வேண்டும் என்று கொண்டு வந்த Vision 2020 இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு இளைஞர்களையும் மாணவர்களையும் தயார் படுத்தும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இன்றைய இளைஞர்களை தயார் செய்து விட்டால் 2020-ல் இந்தியா வல்லரசாக மாறிவிடும் என்ற அப்துல்கலாமின் கனவை நனவாக்க இந்தியா முழுவதும் பல ஆயிரக்கணக்கான நல் உள்ளங்கொண்டவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் இந்தியாவை நேசிக்கும் இந்திய குடிமகன்களில் தன்னையும் ஒருவராக இணைத்துக் கொண்டார்.

இந்த உலகிற்கு எதையாவது கைமாறாக செய்துவிட வேண்டும் என்று நினைத்த விவேக் அவர்கள் புவிவெப்பம் அடைவதை தடுக்கவும், மழை பொழியவும், காற்றுமாசு படுவதை தடுக்கவும், சுத்தமான ஆக்ஸிஜனை சுவாசிக்கவும், ஒரு கோடி மரக்கன்றுகளை நட வேண்டும் என்று முடிவு செய்து அதற்கான பணிகளை கடந்த 10 ஆண்டுகளாக செய்து வந்தார். அவரது இந்தப் பணியானது சமூகத்தின் மீதும், நாட்டின் மீதும் அவர் வைத்துள்ள ஆழ்ந்த அக்கறையை காட்டுவதாக அமைந்துள்ளது. இவருடைய பணியை பாராட்டாத நபர்கள் எவரும் இல்லை என்ற அளவுக்கு அவரது பணி சிறப்பாக நடைபெற்று வந்தது.

கலை உலகில் கலைவாணருக்கு பிறகு முற்போக்கு கருத்துக்களை சொன்னவர் நடிகர் விவேக். ஆன்மீகம் என்ற பெயரால் மக்களை ஏமாற்றும் பிற்போக்கு சக்திகளை எளிமையாக, நகைச்சுவையுடன் திரை உலகில் சொன்னவர் நடிகர் விவேக் அதிலும் குறிப்பாக கண் எதிரே தோன்றினாள் வி.சேகர் இயக்கத்தில் விரலுக்கு ஏத்த வீக்கம், நம்ம வீட்டு கல்யாணம் போன்ற திரைப்படங்களில் நடிகர் விவேக்கின் நகைச்சுவை அளப்பறியது, அனைவராலும் போற்றப்பட்டது.

தமிழ் சமூகத்தின் மீதும், இந்திய நாட்டின் மீதும் பற்றுக்கொண்ட அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு தெரிவித்துக் கொள்கிறோம்.





# எப்படி உற்பத்தியாகிறது, விலை என்ன? கொரோனா நோயாளிகளுக்கு ஏன் ஆக்சிஜன் தேவை?

கோவிட் - 19 பரவலின் காரணமாக நாடு முழுவதும் மருத்துவ ரீதியில் பயன்படுத்தப்படும் ஆக்சிஜனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நோயாளி களுக்கு உயிர் காக்கும் வாயுவாக அளிக்கப்படும் ஆக்சிஜன், தொழிற்சாலைகளில் எப்படி தயாரிக்கப் படுகிறது? அதன் விலை, உற்பத்தித் திறன் ஆகியவை என்ன என்பது குறித்த விரிவான தகவல்களை இங்கே பார்க்கலாம்.

நம்மைச் சுற்றியுள்ள வாயு மண்டலத்தில் சாதாரண சூழலில் 20.9 சதவீதம் அளவுக்கு ஆக்சிஜன் நிரம்பியிருக்கிறது. இயற்கையில் அதீதமாகக் கிடைக்கும் வேதிப்பொருட்களில் ஆக்சிஜனும் ஒன்று. ஆனால், ஒருவர் நோயால் பாதிக்கப்படும்போது, காற்று மண்டலத்தில் இருக்கும் ஆக்சிஜனை ஈர்த்தெடுக்கும் திறன் நுரையீரலுக்குக் குறைகிறது. இந்த நிலையில், தூய்மையான ஆக்சிஜன் நோயாளிகளுக்கு செலுத்தப் படுகிறது.

கொரோனா வைரஸ், நுரையீரலைத்தான் அதிகம் பாதிக்கிறது என்பதால், இந்த நோயாளிகளின் உயிரைக் காக்க வெளியிலிருந்து ஆக்சிஜன் அளிக்கப்பட வேண்டியிருக்கிறது.

இந்த நிலையில் நாடு முழுவதும் லட்சக் கணக்கான நோயாளிகள். ஆக்சிஜன் தேவையுடன் மருத்துவமனைகளில் போராடி வருவதால், பல மாநிலங்களில் ஆக்சிஜனுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது

ஆக்சிஜன் மருத்துவமனைகளில் மட்டு மல்லாமல், தொழிற்சாலைகளிலும் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. உண்மையில், மருத்துவத்திற்காக பயன்படுத்தப்படும் ஆக்சிஜனைவிட தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் ஆக்சிஜன் அளவுதான் அதிகம்.

**ஆக்சிஜன் எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது?**

ஆக்சிஜன் பெரும்பாலும் காற்று மண்டலத்தில் இருந்துதான் சேகரிக்கப்படுகிறது. ஆனால், இதற்கான முறை மிகச் சிக்கலானது. "ஆக்சிஜனை உற்பத்தி செய்ய காற்று மண்டலத்தில் உள்ள காற்றை எடுத்து, சுத்தப்படுத்தி உயர் அழுத்த கலன்களுக்குள் கொண்டுசெல்ல வேண்டும்.

அப்படி கொண்டு செல்லப்பட்ட ஆக்சிஜன் வெகுவாக குளிர்விக்கப்படும். இதனால், கொள்கலனில் உள்ள ஆக்சிஜன் ஒரு கட்டத்தில் திரவமாக மாறும். அப்போது அதன் வெப்பநிலை - 195 டிகிரி சென்டிகிரேட் அளவுக்கு இருக்கும். ஆக்சிஜனுக்கும் ஹைட்ரஜனுக்கும் வெப்பநிலையில் 5 டிகிரி வித்தியாசம் இருக்கும்.

இந்த நிலையில், ஃப்ராக்ஷனல் டிஸ்டிலேஷன் (fractional distillation) என்ற முறையில் ஆக்சிஜனும் ஹைட்ரஜனும் வெவ்வேறு வெப்பநிலையில் பிரித்து எடுக்கப்படும். அந்த ஆக்சிஜன் பிறகு சிலிண்டர்களிலொ, டேங்கிலொ சேர்த்து வைக்கப்படும். டேங்கில் என்றால் திரவ வடிவில் இது சேகரிக்கப்படும். சிலிண்டர்களில் வாயு வடிவில் சேகரிக்கப்படும்" என்கிறார் தமிழ்நாடு ஆக்சிஜன் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் உரிமையாளரும் தமிழ்நாடு ஆக்சிஜன் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவருமான ஆர். கண்ணன்.

இப்படி உற்பத்தி செய்யப்படும் ஆக்சிஜனை மிக மிகக் குறைந்த வெப்பநிலையில்தான் தொடர்ந்து சேமிக்கமுடியும் என்பதால், இரண்டு வால்வுகள் கொண்ட இரட்டை அடுக்குகளால் ஆன கொள் கலன்களில்தான் சேமிக்கவோ, வேறு இடங்களுக்குக் கொண்டுசெல்லவோ முடியும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சிறிதும் பெரிதுமாக 18 - 19 நிறுவனங்கள் ஆக்சிஜனை உற்பத்தி செய்கின்றன. இதில் ஏழு நிறுவனங்கள் பெரிய அளவில் ஆக்சிஜனை உற்பத்தி செய்கின்றன.

இதில் மூன்று நிறுவனங்கள் அரசு மருத்துவ

மனைகளுக்கு ஆக்சிஜனை சப்ளை செய்கின்றன. பல பெரிய உலோக தொழிற்சாலைகளில் லட்சக்கணக்கான லிட்டர் ஆக்சிஜன் தேவைப்படும் என்பதால், அவர்களே உற்பத்திசெய்து கொள்வார்கள்.

**தொழில்துறை - மருத்துவ ஆக்சிஜன் வித்தியாசம் இருக்கிறதா?**

தொழில்துறைக்கும் மருத்துவத்திற்கும் ஒரே மாதிரியான ஆக்சிஜன்தான் பயன்படுத்தப்படுகிறது. "ஆனால், மருத்துவமனைகளுக்கான ஆக்சிஜன் என்றால், சில பரிசோதனைகளுக்குப் பிறகுதான் அவற்றை மருத்துவமனைகளுக்கு அனுப்ப முடியும். மனிதர்களுக்குப் பயன்படுத்தப்படும் ஆக்சிஜனில் கார்பன் மோனாக்ஸைடு, ஹைட்ரோ கார்பன் போன்றவை இருக்கக்கூடாது. 99 சதவீதம் தூய்மையாக இருக்க வேண்டும்."

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆக்சிஜன் நிறுவனங்களிலும் சேர்த்து ஒரு நாளைக்கு 300 மெட்ரிக் டன்கள் ஆக்சிஜன் உற்பத்தி செய்ய முடியும். இதில் 30 சதவீதம் மருத்துவத்திற்கும் மீதமுள்ள 70 சதவீதம் தொழில்துறைக்கும் செல்லும். இப்போது மருத்துவத்திற்கு பெருமளவில் ஆக்சிஜன் தேவைப்படுவதால் தொழில் துறைக்கு ஆக்சிஜன் அளிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. ஆகவே மருத்துவனைகளுக்குக் கூடுதலாக ஆக்சிஜன் கிடைக்கும்.

**ஆக்சிஜனின் விலை என்ன?**

"ஆக்சிஜனின் விலை என்பது அரசால் கட்டுப்படுத்தப்படுகிறது. வாயு வடிவில் ஒரு கியூபிக் மீட்டர் ஆக்சிஜன் விலை 25 ரூபாய் என்ற அளவில் இருக்கும். திரவ வடிவில் என்றால் ஒரு கியூபிக் மீட்டர் 78 ரூபாய் என்ற அளவில் இருக்கும். மருத்துவமனைகளில் படுக்கை உயரத்திற்கு உள்ள ஆக்ஸிஜன் சிலிண்டர் களின் விலை என்பது 60 - 70 ரூபாய் என்ற அளவில் இருக்கும். ஆனால், பொதுவாகவே ஆக்சிஜன் விலையைவிட, அதனை தொழிற்சாலைகளில் இருந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கான செலவுதான் அதிகமாக இருக்கும்" என்கிறார் கண்ணன்.

ஆக்சிஜன் ஜெனரேட்டர்' என்ற எந்திரத்தை வைத்து வீட்டிலேயே ஆக்ஸிஜன் தயாரிக்கலாம்.

"ஆனால், அதன் தூய்மை 93 சதவீதம்தான் இருக்கும். தவிர, ஒரு நிமிடத்திற்கு 5 லிட்டர் என்ற அளவில்தான் அந்த எந்திரத்தில் ஆக்சிஜன் உற்பத்தியாகும். சாதாரணமான நோயாளிகளுக்கு அது போதுமானது. ஆனால், கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அது போதாது. அவர்களுக்கு நிமிடத்திற்கு 15 லிட்டர் அளிக்க வேண்டும். தவிர, மின்சாரம் இல்லாவிட்டால் அந்த எந்திரத்தை இயக்க முடியாது"

பல மாநிலங்களில் கொரோனாவால் பாதிக்கப் பட்டவர்களின் உறவினர்கள், காலி சிலிண்டர்களுடன் ஆக்ஸிஜன் தொழிற்சாலைகளின் வாயிலில் காத்திருக்கும் படங்கள் ஊடகங்களில் வெளியாக ஆரம்பித்துள்ளன.

"இது ஒரு அசாதாரணமான சூழல். அதனால் இப்படி வாங்குகிறார்கள். சாதாரணமாக உற்பத்தியா ளரிடம் சென்று கேட்டால், மருத்துவரின் பரிந்துரைக் கடிதம் இல்லாமல் ஆக்சிஜனை வாங்க முடியாது. தவிர, சாதாரண சூழலில் ஒருவருக்கு ஆக்சிஜன் தேவையும் இல்லை".

ஆக்சிஜனை நீண்ட நாட்களுக்கு பாதுகாத்து வைக்க முடியாது. திரவ வடிவிலான ஆக்சிஜனை சேமித்து வைத்தால், கொஞ்சம் கொஞ்சமாக ஆவியாகி விடும். வாயு வடிவில் உள்ள ஆக்ஸிஜனை சிலிண்டரில் கூடுதலாக சில நாட்களுக்கு பாதுகாத்து வைக்கலாம். ஆனால், ஒவ்வொரு சிலிண்டரின் விலையும் 10,000 ரூபாய் வரும். ஆனால், அதில் 200 ரூபாய் மதிப்பிலான ஆக்ஸிஜனை மட்டுமே சேமிக்க முடியும். ஆகவே, சிலிண்டர்களில் முதலீடு செய்ய பெரிதாக யாரும் முன்வர மாட்டார்கள். ஆகவே அவ்வப்போது உற்பத்தி செய்து பயன்படுத்துவதே சரியானதாக இருக்கும்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் தமிழ்நாட்டில் சுமார் 58,000 பேர் கொரோனா நோயாளிகளாக சிகிச்சையில் இருந்த காலத்தில் ஒரு நாளின் ஆக்சிஜன் தேவை 280 மெட்ரிக் டன்னாக இருந்தது. இந்த ஆண்டு ஏப்ரல் 21ஆம் தேதி நிலவரப்படி நோயாளிகளின் எண்ணிக்கை என்பது 84,361 ஆக இருக்கிறது.

நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிப்பதால், ஆக்சிஜன் தேவையும் அதிகரிக்கும் என்பதில்லை. மொத்தமுள்ள நோயாளிகளில் எவ்வளவு பேருக்கு ஆக்சிஜன் தேவைப்படும் என்பதை வைத்து தினசரி ஆக்சிஜன் தேவை தீர்மானிக்கப்படும். கடந்த ஆண்டு கொரோனா பாதிப்பு ஏற்பட்ட பிறகு, பெரும்பாலான அரசு மருத்துவமனைகள் தங்களது சேமிப்புத் திறனை பல மடங்கு உயர்த்தியுள்ளன. சிறிய மருத்துவமனைகள் சிலிண்டர் வடிவில் ஆக்சிஜனை சேமிக்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான ஆக்சிஜனை தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் முன் தீர்மானித்த விலையில் கொள்முதல் செய்து, விநியோகிக்கிறது.



# மகத்தான தலைவர் தோழர் பி.சி. வேலாயுதம்! நினைவு நாள் 05.05.2021

தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு பகுதியில் வாழ்ந்து வரும் மின் ஊழியர் மத்திய அமைப்பின் முன்னணி ஊழியர்களுள் ஒருவரான ஓய்வு பெற்ற தோழர் தங்கராஜ் அவர்களை தேர்தல் பணியின் போது சந்திக்க நேர்ந்தது. அவருக்கு வயது 75ஐ கடந்த நிலையில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் தலைவர்களுள் ஒருவரும் திருநெல்வேலி தென் மாவட்ட பகுதியின் சிம்ம சொப்பனமாக இருந்த தோழர் பி.சி. வேலாயுதம் அவர்களைப் பற்றிய சில நினைவுகளை நம்மிடம் பகிர்ந்து கொண்டார். தோழர் தங்கராஜ் அவர்கள் தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பு மற்றும் அரசியல் சித்தாந்த ரீதியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு அரசியல் பணியையும், சமூக பணியையும் தொய்வின்றி செய்து வருகிறார். கயத்தாறு பகுதியில் கோவில்பட்டி தொகுதி வேட்பாளராக நிற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் தோழர் கே. சீனிவாசன் அவர்களுக்கு தேர்தல் பணி செய்ய வந்த தோழர்களுக்கு தனது வீட்டின் ஒரு பகுதியை அளித்து தங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தவர் தோழர் தங்கராஜ் அவர்கள்.

தோழர் தங்கராஜ் அவர்களின் நினைவுகளிலிருந்து மறைந்த தோழர் பி.சி.வேலாயுதம் அவர்களின் சங்கப்பணி மற்றும் அரசியல் பணியை கேட்டறியும் வாய்ப்பு கிடைத்தது. மின் ஊழியர் மத்திய அமைப்பு தென் மாவட்டங்களில் வளர்வதற்கு முக்கிய காரணமாக அமைந்தவர் தோழர் பி.சி. வேலாயுதம். கேரள மாநிலத்தில் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த அவர் மின் வாரியத்தில் தினக்கூலி தொழிலாளியாக பணியாற்றி, மத்திய அமைப்பின் போராட்டத்தால் கவரப்பட்டு கேடராக, தலைவராக உயர்ந்தவர்களில் தோழர் பி.சி.வேலாயுதமும் ஒருவர். நிர்வாகத்தின் அடக்கு முறைக்கு அஞ்சாமல் சமரசமற்ற போராட்டத்தைச் செய்து மத்திய அமைப்பை வளர்ப்பதிலும், மின் ஊழியர்களை காப்பதிலும் தலைமைப்பாத்திரம் வகித்தவர். தொழில் நுட்பம் வளராத அந்த காலத்தில், போக்குவரத்து வசதிக்குறைவாக இருந்த நாட்களில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து குறிப்பாக தென் தமிழகத்தில் ஸ்தாபனத்தை பலப்படுத்தியதில் பெரும்பங்காற்றினார். அவர் ஒரு போதும் முழுமையாக சம்பளம் வாங்கியதாக வரலாறு இல்லை. ஒவ்வொரு மாதமும் 10 நாட்கள் 15 நாட்கள் சம்பளப் பிடித்தம் செய்யப்பட்டது தான் பி.சி.வி.ன் மின்வாரிய பணி வரலாறு. அவருக்கு 2 மகளும், ஒரு மகனும் வாரிசாக இருந்தனர். மாதத்தின் சரிபாதி நாட்கள் வெளியூரில் இருந்ததால் குடும்பத்தை சரியாக கவனிக்க முடியாமல் வறுமையின் பிடியில் வாழ நேர்ந்தது. அப்போதெல்லாம் மத்திய அமைப்பின் தோழர்கள் அவரையும், அவரது குடும்பத்தையும் பாதுகாத்து வந்தனர். அவர் பணியிலிருந்து 1986-ம் ஆண்டு பணி ஓய்வு பெற்ற போது அவருக்கு பென்சன் கிடையாது. பிடிப்பு சலுகைகள் இல்லை, எந்த பணப்பயனும் இன்றி பணி ஓய்வு பெற்ற போது மத்திய அமைப்பின் தோழர்கள் நிதி வசூல் செய்து சுமார் 45,000/- ரூபாயை அவருக்கு கொடையாக அளித்தனர். அதை விருப்பமில்லாது ஏற்றுக் கொண்ட அருமைத்தோழர் பி.சி. வேலாயுதம் அவர்கள் அந்த பணத்தை கட்சிக்கும், சங்கத்திற்கும் சரிபாதி பிரித்து கொடுத்தார்.

தமது பணிக்காலம் முழுவதும் சங்கத்திற்காகவும் கட்சிக்காகவும் நேர்மையாக உழைத்து பல்வேறு போராட்டங்களில் சிறைக்குச் சென்று இளைஞர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த தோழர் பி.சி.வேலாயுதம் அவர்களின் நினைவு நாள் 05.05.2021. இவரைப்போன்று அப்பழுக்கற்ற நேர்மையான தலைவரை, தியாகத்தின் உருவமான தலைவரை எப்போதும் காண முடியாது. அவரோடு இருந்த நாட்களை நாங்கள் அவ்வப்போது நினைவு கூறும் பொழுது கண்கள் கலங்குகின்றது, பழைய நினைவுகள் மனதிற்கு வருகின்றது, என்று தோழர் தங்கராஜ் அவர்கள் தனது நினைவலைகளை தேர்தல் பணியின் போது நம்மோடு பகிர்ந்து கொண்டார். பி.சி.வேலாயுதம் போன்று எண்ணற்ற தலைவர்களும் கேடர்களும் கட்டி வளர்த்த மத்திய அமைப்பை மேலும் வலுவாக கட்டி அடுத்த கட்ட தலைமுறைக்கு கொண்டு செல்வோம்.

சங்கத்தை பலப்படுத்துவோம்!

அரசியல் சித்தாந்தத்தை தொழிலாளிக்கு கொண்டு செல்வோம்!

பழைய நினைவுகளை புதிய தலைமுறைக்கு கொண்டு செல்வோம்!

**- தி.ஜெயசங்கர்**



# மே 8 விபிசி நினைவு தினம்

தமிழக தொழிலாளி வர்க்கம் விபிசி என அன்போடு பாசத்தோடு அழைத்த அருமைத் தலைவர் வி.பி.சிந்தன் அவர்கள் மறைந்து 34 ஆண்டுகள் ஆனாலும் இன்று வரை தொழிலாளி வர்க்கத்திற்கு அவர் ஆற்றிய சேவைகள் அரும்பணிகள் என்றென்றும் நினைவு கூறத்தக்க அளவில் உள்ளது.

விபிசி அபூர்வமான மனிதர். தும்பைப்பூ போன்ற தூய வெண்ணிற ஆடை அவரது வெளித் தோற்றம். அதனினும் தூய்மையானதாக இருந்தது அவரது உள்ளம்.

அந்த மாபெரும் தலைவரால் உருவாக்கப்பட்டவர்கள் இன்று இந்திய அரசியல் வானில் ஜொலித்து கொண்டிருக்கிறார்கள். அரசியல் பொருளாதாரம்- விஞ்ஞானம் என அனைத்திலும் தனிமுத்திரைப் பதித்தவர் விபிசி.

சமூக மாற்றத்திற்காக தொழிலாளி வர்க்கத்தை தயார்படுத்துவதில் பெரிதும் அக்கறை செலுத்தினார். அவர் தலைமையில் நடத்திய எண்ணற்ற போராட்டங்களின் போது இதனை காணலாம்.

போராட்டத்திற்கிடையே அவர் உரையாற்றும் போது,

" தொழிலாளர்களே! உங்கள் போராட்டம் உங்களுக்கு ஊதிய உயர்வு, பஞ்சப்படியை மற்றும் இதர சலுகைகளை பெற்றுத்தரலாம். அதனால் எல்லாம் உனது குறை நீங்காது, திருப்தியான வாழ்க்கை கிட்டாது. ஆட்சி மாற்றம் தேவை, ஆட்சி மாற்றம் என்றால் ஒரு கட்சி போய் இன்னொரு கட்சி அல்ல.

தொழிலாளி வர்க்கம் கையில் ஆட்சி மாற்றம் என்று கூறுவார்". பொதுவாக அவரது உரை கேட்டாலே நாடி நரம்புகள் கிளர்ந்தெழும்.

வாலிபர்-மாணவர்-மாதர் அமைப்புகளுக்கு பேருதவியாக வாழ்ந்தார். தொழிற்சங்க தலைவராக மட்டுமல்ல சட்டமன்ற உறுப்பினராக மக்கள் தலைவராகவே வாழ்ந்தார். அவர் சட்டமன்றத்தில் ஆற்றிய உரை களப்பணியில் நேரடியாக பங்கெடுத்ததெல்லாம் இன்றைக்கும் பேசும் பொருளாக உள்ளது.

ஏராளமான அறிவுஜீவிகள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பொருளாதார நிபுணர்கள், விஞ்ஞானிகள் என பலரோடு நட்போடு இருந்தார். இந்த அவரின் நட்பு தொழிலாளி வர்க்கத்திற்கு, முன்னணி ஊழியர்களுக்கு பெரிதும் உதவி புரிந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

சமூக மாற்றத்திற்காக, தொழிலாளி வர்க்க நலன்களுக்காக வாழ்ந்த தூய்மையான மனிதரை கொலை செய்யும் நோக்கோடு ஆளும்கட்சியும்- சமூக விரோதிகளும் விபிசி பேரூந்தில் பயணம் செய்யும் போது, சென்னை மூலக்கடை பகுதியில் அவரை கத்தியால் குத்தியும் இரும்புகம்பி, தடி கொண்டு தாக்கினர். உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட செய்தி காட்டு தீப்போல் பரவி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மருத்துவமனை நோக்கி படையெடுத்து வந்தனர், விபிசியின் மனவலிமை, மருத்துவர்களின் தீவிர சிகிச்சையால் குணமடைந்து, மேதின பூங்கா (அன்றைக்கு நேப்பியர் பூங்கா) அருகில் ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்த கூட்டத்தில் விபிசி அவர்கள் பேசும் போது 'என் உடம்பில் ஒரு சொட்டு ரத்தம் இருக்கும் வரை தொழிலாளி வர்க்க நலனுக்காக பாடுபடுவேன் என கூறியது அனைவரின் கண்களிலிருந்து நீர் பெருக்கெடுத்ததை பார்க்க முடிந்தது.

அந்த மகத்தான தலைவர் மறைவிற்கு பின் சிஐடியு மாநிலக்குழு சார்பில் ஒவ்வொரு ஆண்டும் மே 8 அன்று அனைத்து மாவட்டங்களிலும் ரத்ததான முகாம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டு அனுஷ்டித்து வருகிறோம்.

சமூக மாற்றத்திற்காக தொழிலாளி வர்க்கத்தை தயார் படுத்துவதே விபிசிக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

***- வி.குமார்***

# மின் உற்பத்தி திட்டங்களை நிறுத்தி, ரத்து செய்வது யாருக்கு லாபம்?

ராமநாதபுரம் மாவட்டம் உப்பூரில் ரூ.10,763 கோடி செலவில் 2 X 800 =1,600 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான பணிகள் ஆரம்பித்து நடந்துகொண்டிருந்தன .இதற்காக 995 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதை எதிர்த்து நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றம் சென்றார்கள். நீதிமன்றம் 3 .7 2019 .அன்று நிலம் கையகப்படுத்தியது செல்லாது என்று அறிவித்துவிட்டது. இதன் பிறகு தமிழ்நாடு அரசாங்கம் உச்ச நீதிமன்றத்திற்கு சென்றது. உச்சநீதிமன்றம் 27.9.2019 இல் இந்த நிலம் கையகப்படுத்துவது குறித்தான பிரச்சினையில் விசாரணை முடியும்வரை ஸ்டேட்டஸ் கோ அதாவது உயர்நீதிமன்ற ஆணைக்கு முன்பிருந்த நிலை தொடரும் என்று கூறியது.அதாவது கட்டுமானப் பணிகளைத் தொடரலாம் என்று தீர்ப்பளித்தது இதற்குள் புதிய நிலம் கையகப்படுத்தும் சட்டம் 4/7/2020 இல் அமலுக்கு வந்தது. இந்த பணிகள் நடந்து கொண்டிருக்கையில் 2021 அதாவது இந்த ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் தேதி தேசிய பசுமை ஆணையத்தின் தென்மண்டல பிரிவு இந்த பணிகளை நிறுத்தும் படியும் புதிதாக சுற்றுச்சூழல் அனுமதி ( EC ) பெற வேண்டும் என்றும் அதுவரையிலும் ஒட்டுமொத்தமாக பணிகளை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் உத்தரவு பிறப்பித்தது. அதனடிப்படையில் இப்போது இந்த பணிகளை நிறுத்தி விடப் போவதாகவும் இந்த பணிகள் அனைத்தையும் தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் ஏற்கனவே அமைக்கப்பட்டு வருகிற உடன்குடி அனல் மின் நிலையத் திலேயே அமைக்கப் போவதாகவும் சொல்லி இருக்கிறார்கள்.

இதற்கென்று கடந்த இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு நடந்த தமிழ்நாடு மின் வாரியக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னதாக இந்தப் பணிகளுக்காக பிஎச்இஎல் நிறுவனத்துடன் ரூ.5852 கோடிக்கு பாய்லர் ,டர்பைன் மற்றும் ஜெனரேட்டர் உள்ளிட்ட பணிகளைச் செய்வதற்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டது அதே போல மீதி உள்ள பணிகளை முடிப்பதற்காக ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு ரூ.3647 கோடிக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டது. ஆனால் அந்த நிறுவனம் விலைகள் அதிகமாகி விட்டதாக சொல்லி இடையிலேயே விலகிக்கொண்டது. இப்படியெல்லாம் விலகிக் கொண்டால் அந்த நஷ்டத்தை யார் ஏற்றுக் கொள்வது.ஒருவர் ஒப்பந்தம் செய்து விட்டால் அந்த பணிகளை செய்து கொடுக்க வேண்டும்; நட்டம் வந்தால் ஏற்க வேண்டும் என்பது தான் விதியாக இருக்கும். ஆனால் ரிலையன்ஸ் இன்ஃப்ரா இதிலிருந்து விலகிக் கொண்டார்கள். இதற்கிடையில் எல்ஃடி நிறுவனத்துடனும் ஒரு ஒப்பந்தம் உருவாக்கப் பட்டது .அதாவது கடல் நீரை எடுத்து வந்து குளிர்விப்பதற்காக பயன்படுத்தி திரும்பவும் கடலில் விடுவதற்காக ரூ.1,067 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவும் முடிந்து ஒட்டுமொத்த பணிகளில் ரூ.2396 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்ட பிறகு அந்த உப்பூர் அனல் மின் நிலைய பணிகளை நிறுத்தி விடுவது என்று முடிவு செய்திருக்கிறது தமிழ்நாடு மின்சார வாரியம்.

மக்களுடைய வரிப் பணத்தில் இயங்குகிற இத்தகைய அமைப்புகள் ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு பார்க்கிறார்கள். ஒவ்வொரு முறை நிதிப்பற்றாக் குறை வரும் போதும் அந்த சுமையை எல்லாம் மின் நுகர்வோர் தலையில் கட்டுகிறார்கள். விட்டுவிட்டு ஓடிய ரிலையன்ஸ் இன்ஃப்ரா தமிழகம் முழுவதும் இந்த மாதிரியான வேலைகள் செய்வதில் இருந்து நீக்கிவைக்க கருப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டு இருக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது. ஏழை தவறு செய்தால் எந்த அளவிற்கும் தண்டனை கொடுக்கிறார்கள். ஆனால் சமூகத்தில் பணத்தில் அதிகாரத்தின் உச்சத்தில் இருப் பவர்கள் எது செய்தாலும் அது எத்தனை கோடி ரூபாயாக இருந்தாலும் எத்தனை ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தாலும் அதைப்பற்றி கவலைப்பட மாட்டார்கள். இது எப்படி சரியாக இருக்கும் உடனடியாக இந்த ஒட்டுமொத்த விஷயங்கள் குறித்தும் ஒரு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் நீதிமன்றம். நீதிமன்ற வழிகாட்டுதலில் விசாரணையின் நடைபெற்று அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்பதை அனைவரும் வலியுறுத்த வேண்டும்.

இதே போல எண்ணூர் விரிவாக்க உற்பத்தி திட்டமும் ரத்து செய்யப்பட்டுள்ளது என்ற தகவலும் கிடைத்துள்ளது.

கே. கனகராஜ்

**:TANGEDCO:**

(ABSTRACT)

Establishment of 2X800 MW Uppur Supercritical Thermal Power Project - National Green Tribunal order – Apprisal and Directions of the TANGEDCO Board for shifting the project from Uppur to Udangudi - Approval accorded by the Board of TANGEDCO – Reg.

---

(Per.) FB TANGEDCO Proceedings No.43 (Technical Branch ) dt: 29.04.2021

Chithirai-16, Pilava

Thiruvalluvar Aandu 2052

READ: 1. Extract of the minutes of 350th BLTC MEETING held on 26-04-2021 (Sl.No.TG 6182).

2. Extract of the minutes of 100th TANGEDCO BOARD Meeting held on 27-04-2021 (Sl.No. TG-100.37).

**PREAMBLE:**

The EPC Contract for 2X800 MW Uppur Project was awarded in three packages viz., BTG package to M/s. BHEL for Rs. 5852 Cr, BOP (Balance of Plant) package awarded to M/s. Reliance Infra for Rs.3647 Cr and the same was short closed due to huge price escalation sought by M/s. RIL and retendering of BOP package is in progress. Sea water intake and outfall system package was awarded to M/s. L&T for Rs.1067.66 Cr. PMC contract of Uppur was awarded to M/s Tata Consulting Engineers for Rs.43.57 Cr.

Land required for the Uppur Project is around 995 acres and in this 350 acres of patta land is under litigation. Writ petitions challenging the Land Acquisition Act have been filed by land owners of the project site. Judgement has gone in favour of land owners as on 03.07.2019 and Government of Tamil Nadu approached the Hon'ble Supreme court for review. Interim order was issued by Supreme court on 27.09.2019 that the proceedings on land acquisition shall go on and the status quo of possession of land shall be maintained. Meanwhile GOTN has obtained Presidential approval for the revised land acquisition bill and based on that the District Collector/Ramnad has issued enter upon permission for the litigated land on 04.07.2020.

Meanwhile, The National Green Tribunal Southern Zone, Chennai -Appeal No. 144 of 2016 (SZ), in Judgement Pronounced on 17th March, 2021 have given directions to suspend the work until obtaining the revised Environmental Clearance (EC) for 2X800 MW Uppur Thermal Power Project. Hence the EPC contracts of BTG package and sea water package were suspended.

Coal for the Uppur Project is to be transported from Tuticorin Port through Rail route. New Railways private siding for 28.8 KM from Ramanathapuram to Uppur site is to be established.

Udangudi Project is proposed to establish 6X660 MW project in 3 stages. Initially stage-I 2X660 MW was approved and EPC contract was awarded to M/s. BHEL. Captive Coal Jetty contract for handling of Coal was awarded to M/s. ITD Cementation. The captive coal Jetty proposed for this project can handle the coal requirement for 3 stages of the project ie., for 4000 MW. Administrative approval for the 2nd and 3rd stage is to be obtained from the Government of Tamil Nadu.

If the Uppur project is shifted to Udangudi, the existing Coal jetty at Udangudi will be fully utilized and the new railway siding works at Uppur is not required. As such, there will be reduction in the Coal logistic cost, thereby reducing the variable cost.

To overcome various issues like NGT Order, land litigation, local people agitation and Railway siding works in establishing the Uppur Project, shifting the 2X800 MW project from Uppur site to Udangudi may be prudent and economically viable option as Udangudi (2X800 MW ) Stage II by utilising the existing captive coal jetty.

**PROCEEDINGS:**

Considering the above, the TANGEDCO Board has accorded in-Principle approval for the following in respect of 2 x 800 MW Supercritical Coal based Uppur Thermal Power Project and stated that the Project in Uppur will be considered as a fresh project once all the legal issues in NGT & Other places are settled.

(i) To shift the 2X800 MW Uppur Project to Udangudi site as Udangudi Stage-II Project.

(ii) To approach Government of Tamil Nadu for its approval of above proposal.

(iii) To approach Government of Tamil Nadu for administrative approval for establishment of 2X800 MW Udangudi Project stage-II instead of already sanctioned 2X660 MW Udangudi stage-II.

(By order of the BOARD)

29/4/21

CHIEF ENGINEER/PROJECTS - I



# மின்வாரியத்தில் அநியாயத்தை எதிர்க்க 17 வருடங்கள் தேவையாயிருக்கு?

மின்வாரியத்தில் பணிபுரியும் அதிகாரிகள் சிலர் செய்யும் சேட்டைகளினால் தொழிலாளர் களின் குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகின்றது. அதை எதிர்க்க வலுவுள்ளவர்கள் மட்டுமே வாழ முடிகிறது. வெற்றி பெற முடிகிறது. அப்படி ஒரு போராட்டம் தான் முகமது கலிபுல்லா கம்பியாளருடையது. 2002 ஆம் ஆண்டில் சென்னை தெற்கு மின் வழங்கல் வட்ட நிர்வாகத்தினால் தூக்கி எறியப்பட்ட கலிபுல்லா மீண்டும் பணிக்கு வந்தது 2019 ஆம் ஆண்டில் தான்.

1994-இல் களஉதவியாளராக பணியில் சேர்ந்த கலிபுல்லா வேளச்சேரி பிரிவில் கம்பியாளராக பணியாற்றிய போது 2002 ஆம் ஆண்டில் அவருடைய மனைவி விவாகரத்து பெற்று விடுகின்றார். மணமுடைந்த கலிபுல்லா தன் நினைவு இன்றி போகின்றார். தாயார் அரவணைப்பில் குணம் ஆகி மீண்டும் 2007 ஆம் ஆண்டில் வேலைக்கு அனுமதிக்க வேண்டு கின்றார்.

உதவிப்பொறியாளர் மேலதிகாரிகளின் ஆலோசனையுடன் மருத்துவக்குழு முன்னால் ஆஜராக பணிக்கின்றார். மருத்துக்குழு ஆலோசனைப்படி கீழ்பாக்கம் மனநல மருத்துவமனை மருத்துவக்குழு முன்னால் ஆஜரானார். மனநல மருத்துவக்குழுவோ சென்னை அரசு மருத்துவமனை மருத்துவக்குழுவோ அளித்த மருத்துவக்குழு அறிக்கையை மின்வாரிய நிர்வாகம் பெற்றதா என்று தெரியாத நிலையில் மேற்பார்வை பொறியாளர் நிர்வாகம் கலிபுல்லா மீது அனுமதி இல்லாமல் பணிக்கு வரவில்லை என்று 2011 ஆம் ஆண்டில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது.

விளக்கம் கொடுத்தும் விசாரணை வைக்கப்பட்டது விசாரணை அதிகாரி எப்பொழுது போல் நிர்வாகம் சொன்ன கூற்றை நிருபண மானதாக தெரிவித்த காரணத்தினால் கலிபுல்லா 2012 ஆண்டில் வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

வறுமை துரத்தும் நிலையில் எங்கே செல்வது. எப்படி வாழ்வது என்பது தெரியாத நேரத்தில் தென்சென்னை மத்திய அமைப்பு சிஐடியு சங்கம் உதவியது.

தொழிலாளர் அலுவலர் முன்னால் வேலை நீக்கத்தை எதிர்த்து மனு போடபட்டு தொழிலாளர் நீதி மன்றத்தில் வழக்கு நடத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் வேலை நீக்கம் தவறானது என்றும் பின் விளைவுகளுடன் பணியில் சேர தீர்ப்பு அளிக்கப்பட்டது. தீர்ப்பினை மேல்முறையீடு செய்தாலும் வெற்றி பெற வாய்ப்பில்லை என்று கருத்தினை பெற்ற மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் கலிபுல்லா அவர்களுக்கு கம்பியாளர் பணியை பணித் தொடர்ச்சியுடன் அளித்தது.

தற்போது அடையாறு கோட்டத்தில் பணிபுரிகின்றனர். பணித்தொடர்ச்சியுடன் ஊதியத்தை கணக்கு போட்டு நிர்வாகம் 28 லட்சம் ரூபாய் நிலுவைத் தொகையாக அளிக்க வேண்டியதாயிற்று. இன்னும் பதவி உயர்வுகள் பாக்கி உள்ளது.

உரிய நேரத்தில் மின்வாரிய நிர்வாகம் செயல்பட்டு இருந்தால்17 ஆண்டுகாலம் கலிபுல்லா என்ற நபர் அல்லலுக்கு ஆளாகி இருக்க மாட்டார்.

வழக்கை நடத்தி வெற்றியை பெற்றுத்தந்த வழக்கறிஞர்கள் வி.அஜய் கோஷ் மற்றும் மனோகரன் அவர்களுக்கு பாராட்டுக்கள். வழக்கை நடத்துவதற்கு உதவியாயிருந்த மத்திய அமைப்பு முன்னால் தலைவர் கே.விஜயன் மற்றும் மத்திய அமைப்பு தென்தென்னை நிர்வாகி களுக்கும் திரு.கலிபுல்லா நன்றியை தெரிவித்ததுடன் ரூ. ஒரு லட்சம் நன்கொடையாக மத்திய அமைப்பு தென்சென்னைக்கு வழங்கி யுள்ளார்.

17 ஆண்டுகளின் வலியின் வடு இருந்தாலும் நியாயத்தை பெற்றோம் என்ற போது நிர்வாகத்தின் அராஜகத்தை எதிர்த்து வெற்றி பெற்றோம் என்ற மகிழ்ச்சி இருக்கத்தான் செய்கின்றது.

**அன்பழகன்**
செயலாளர் /தென்சென்னை 2 கிளை

மின்கதிர் நன்கொடையாக
ரூ. 2000/- அளித்தார். வாழ்த்துக்கள்

# மின் விபத்துகளில் பலியாகும் மின் ஊழியர்களும் பொது மக்களும் கால்நடைகளும்

சமீபத்தில் சேவூரை சேர்ந்த ஒரு விவசாயி, குண்டல் பேட்டையில் உள்ள தனது தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச சென்றுள்ளார். வழியில் மின் கம்பி தாழ்வாக சென்றுள்ளதை கவனிக்காமல் சென்றார். விளைவு, கழுத்து பகுதியில் மாட்டி, அவரது கழுத்து தனியாக அறுந்து கம்பியில் உள்ளது. சிறு வயது குடும்பம் நடுத்தெருவில்.

அதே போல மதுரை - மேலூர் தெற்கு பிரிவில் தாழ்வழுத்த மின்பாதை கிழே கிடந்து மின்சாரம் சென்ற கொண்டு இருந்த காரணத்தால், ஒரு மாடும்,கன்றும் பலியானது.

பல்வேறு இடங்களில் விபத்துகள் நடந்து கொண்டு தான் இருக்கிறது. ஏன் இந்த விபத்துகள் நடக்கிறது என்ற கேள்வியும் அனைவர் மனதிலும் எழலாம்.

இதே போல மின்வாரிய களப்பிரிவு பணியாளர்களும் அடிக்கடி விபத்துக்குள்ளாகிறார்கள். இவைகளுக்கு என்ன காரணம்?

**மின்பாதைகள் ஏன் பராமரிக்க முடியவில்லை.**

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை ஒவ்வொரு ஆண்டும் மழைக் காலத்திற்கு முன்பு பருவகால பராமரிப்பு ( Premonsoon Inspection) என்று முறையில் மின்பாதைகளை ஆய்வு செய்வோம். அதற்கு பிரிவு அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் இருந்தனர். மின் கம்பிகளின் இலுவைகளை சரி செய்வதும், இன்ஸ்லேட்டர்களை ஆய்வு செய்து தரமானவைகளை பொருத்தும் பணி, சேதமடைந்த கற்காரை கம்பங்களை மாற்றும் பணி என அனைத்தும் நடைபெற்றது.

தமிழக அரசு மற்றும் வாரிய நிர்வாகத்தின் அலட்சிய போக்குகள் பணியிடங்கள் பல ஆண்டுகளாக காலியிருந்ததின் விளைவு, நாளடைவில் இந்த பணிகள் செய்ய முடியாமல் போய் விட்டது. தற்போது தான் 9613 பேர் கேங்மேன் என்ற பதவியில் நிரப்பப்பட்டுள்ளனர்.

பராமரிப்பு பணிகள் செய்ய பிரிவு அலுவலத்தில் போதுமான பணியாளர்கள் இல்லாத சூழல், அன்றாடப்பணிகள் பார்ப்பதில் கடுமையான பணிச்சுமை. இதன் விளைவு பொது மக்களும் மின் ஊழியர்களும் பாதிக்கப்பட்டனர். அனுதினமும் ஏதாவது ஒரு இடத்தில் விபத்து நடந்து வருகிறது.

இதில் என்ன கொடுமையான விஷயம் என்றால், யார் இறந்தாலும், களப்பிரிவு பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து விடுவார்கள். போதிய பணியாளர்கள் இல்லை எனத் தெரிந்தும் அதை போக்க முன் வராத அரசும் வாரியமும் தான் குற்றவாளிகள். ஆனால் விபத்து நடந்த அந்த நேரத்தில், யாரையோ திருப்திப்படுத்த களப்பிரிவு ஊழியர்கள் பலிகடா, சஸ்பென்ட், பணியிட மாறுதல். இந்த பணிச்சுமைகளோடு, வேலை செய்யும் களப்பிரிவு தொழிலாளி, மின் மாற்றிகளையும் காற்றுத் திறப்பான்களையும் சரி செய்ய முடியாமல் விபத்துக்குள் சிக்கி கொண்டு, கை கால் உடல் உறுப்புகள் தேமடைந்து அல்லது மாண்டு போகிறான்.

**இவைகளுக்கு என்ன தீர்வு**

வேலைப்பளு - ஊதிய உயர்வு முத்தரப்பு ஒப்பந்தத்தின் படி, நிர்ணயிக்கப்பட்ட மின்மாற்றிகள் அல்லது மின் இணைப்புகளுக்கு ஏற்ப போதிய பணியாளர்களை நியமிக்க வேண்டும். தரமான தளவாட பொருட்களை தர வேண்டும். வேலைகளை பகிர்ந்து அளித்து அனைத்து அலுவலகங்களிலும் காலையில் மகிழ்ச்சியுடன் பணியாற்ற சூழலை பிரிவு அலுவலர்கள் உருவாக்க வேண்டும்.

இத்தனைக்கு மேலாக, வாரிய தலைமை அலுவலகத்திலிருந்து விபரங்கள் கோர கெடு விதிக்கும் ஏற்பாடுகளை கைவிட வேண்டும். (மின்வாரிய பணியாளர்களின் நலன் சார்ந்த பிரச்சனைகளுக்கும் மட்டும் கெடுவிதிக்க மாட்டார்கள். அது வேறு விஷயம்) மேல்மட்ட அலுவலர்கள் கண்டிப்பாக, நேர்மையாக இருக்கின்றவர்களாக இருக்க வேண்டும். தண்டிக்கின்ற அலுவலர்களாக இருக்கக் கூடாது.

என்ற எதிர்பார்ப்பில்

களத்தொழிலாளி



5 ஈ.பி.டுடே எப்ரல் 2021

**நெஞ்சம் உண்டு நேர்மை உண்டு ஓடு ராஜா... நேரம் வரும் காத்து இருந்து பாரு ராஜா...**

உண்மையாகவே மின்வாரியப்பணிகளில் K2 ஒப்பந்தம் மூலம்பணியாற்றி வந்த அனுபவம் உள்ளவர்களில் இருந்து சட்டத்திற்கு உட்பட்ட முறையில் திறமையானவர்களை தேர்வு செய்து பணியமர்த்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடும், புதிதாக ஐந்தாம் வகுப்பு கல்வியை ...யில்வேயைப்போல கேங்க்மேன் என்ற ...க்கி, அதே நேரத்தி...

முன்வைத்த காரணத்தினால் விரிவான உண்மைகளை உங்களுக்கு தெரிவிக்க வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்பட்டு விட்டது.

மின்வாரியப்பணிக்கு சிறிதும் தொடர்பு இல்லாதவர்களைக்கூட ஒப்பந்தத் தொழிலாளர் என்ற போர்வையில் ஆளும் கட்சிக்காரர்கள், சங்க நிர்வாகிகளின் சொந்தக்காரர்கள், மின்வாரிய ... ...ரிசுகள்,

# விரக்தியின் விளிம்பில் ஐக்கிய சங்கத்தலைமை!

ஐக்கிய சங்கத்தின் 2021 ஏப்ரல் மாத இதழில் அருகதை அற்ற அடலேறுகள் கூறுவதாக மின் ஊழியர் மத்திய அமைப்பை தரம் தாழ்ந்து விமர்சித்துள்ளனர்.

ஐக்கிய சங்கத்தின் விமர்சனத்திற்கு விவரங்களை தெரிவிக்க வேண்டிய கட்டாயம் மின் ஊழியர் மத்திய அமைப்பிற்கும் ஏற்பட்டுள்ளது.

கேங்மேன் பதவியை நிரப்புவது சம்மந்தமாக தெளிவான முடிவை மின் ஊழியர் மத்திய அமைப்பு எடுத்தது என்பது அனைவரும் அறிந்ததே! இது தொடர்பான அனைத்து விளக்கங்களையும் எங்களது சங்கமாக இதழில் பிரசுத்திருந்தோம். இந்த விவரங்கள் அனைத்தும் ஐக்கிய சங்கத்தலைமைக்கு நன்றாக தெரியும். ஆனால் அவர்களது 2021 மார்ச் மாத இதழில் கேங்மேன் பதவிக்கு தேர்வானவர்களுக்கு பணி நியமன உத்திரவு வழங்கிய பின்பு ஐக்கிய சங்கத்தில் உறுப்பினராக சேர்ப்பதற்கு கூட்டுக்குழுவில் உள்ள சங்கங்களை சொச்சைப்படுத்தி காட்டிக்கொடுத்தது ஐக்கிய சங்கமே.

ஒப்பந்த தொழிலாளர்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் ஆனால் ஒப்பந்த தொழிலாளர்கள் ஏதாவது நிரந்தரமான பணியில் மின் வாரியத்தில் இணைந்தால் சங்கத்தில் சேர்த்துக் கொள்வார்களாம். கொள்ளைப்புற வழியில் உள்ளே நுழைந்து நிரந்தரப்பணியில் சேர்ந்தவர்களாக ஒப்பந்த ஊழியர்களை அசிங்கப்படுத்தும் ஐக்கிய சங்க தலைமையை என்ன சொல்வது இவர்கள் சங்கத்தில் சேர்ந்தால் அவர்களை நேரிடையாக வந்தவர்களாக கருதப்படுவார்களோ! என்னவோ! நேரடி பணி நியமன தேர்வுகளில் மதிப்பெண் பட்டியலை தேர்வு எழுதிய அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என நீதிமன்றத்தில் தீர்ப்பு பெற்று இன்று வரை அமலாகி வருவதற்கு காரணம் எங்களது மின்துறை பொறியாளர் அமைப்பு. அனைத்து பதவிகளுக்கும் நேர்மையான முறையில் தேர்வு நடத்தி பணி நியமன உத்திரவு வழங்கிட வேண்டுமென்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

ஆனால் 1970 ஒப்பந்த தொழிலாளர் ஒழிப்புச் சட்டத்தை மின்வாரிய நிர்வாகம் அமல்படுத்தாததின் விளைவு 10,15 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் இந்த மின்வாரிய பணியை நம்பி வாழும் ஒப்பந்த ஊழியர்களை வஞ்சிப்பது நியாயமல்ல.

தானே புயல், சென்னை வெள்ளம், ஒக்கி, கஜா புயல் போன்ற இயற்கை பேரிடர் காலத்தில் கிடைத்த இடத்தில் உறங்கி உணவு உண்டு, பணியாற்றியவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று சொல்வதில் என்ன தவறு உள்ளது.

அடுத்து போகிற போக்கில் ஆளும் கட்சிக்காரர்கள், சங்க நிர்வாகிகளின் சொந்தக்காரர்கள், மின்வாரிய அதிகாரிகள், பணியாளர்களின் வாரிசுகளும் தான் ஒப்பந்த ஊழியர்கள் என பொய்யான வாதத்தை கூறி வரும் தலைமையே! அப்படி பணிக்கு சேர்ந்தவர்களை எனது சங்கத்தில் உறுப்பினர் ஆக்க மாட்டேன் என சொல்லும் துணிவு இருக்கிறதா?

ஏதோ ஒப்பந்த தொழிலாளர்களாக இருந்து மின்வாரியத்தில் பணி நிரந்தரம் பெற்று அவர்களது கல்வித் திறமையால் வாரியத்தில் அனுமதி பெற்று பட்டம் மற்றும் பட்டயம் உள்ளிட்ட படிப்புகளை படித்து உள்முக தேர்வில் விண்ணப்பித்து பணியில் சேர்வது என்பது பின் கதவு வழியாக நேரடி தேர்வின் மூலம் நிரப்பிட வேண்டிய பதவிகளை பறித்துக் கொள்கிறார்கள். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ITI படித்து களஉதவியாளராக பணியில் சேர்பவர்கள் பட்டயம் மற்றும் பொறியியல் பட்டம் படித்து TA/ AE ஆக பணியில் சேருகின்ற போது அதுவும்

நேரடி தேர்வு மூலம் தான் நிரப்பப்பட வேண்டுமென கூறிப்பாருங்கள். அடலேறுகளின் நிலையை எண்ணிப்பாருங்கள்?

வேலை இல்லாத வாலிபர்கள், ஜனநாயக வாலிபர் சங்கம் மூலம் போராடினார்கள் என்ன தவறு? மீடியாவில் பேசுவது குற்றமா? உண்மையை சங்கம் எடுக்கும் நடவடிக்கையை மத்திய அமைப்பு நிர்வாகிகள் வெளிப்படையாக சொல்வதில் எங்களுக்கு என்றைக்குமே அச்சமில்லை எங்கள் முன்னோடிகள் எங்களை அப்படி தான் வார்த்தெடுத்துள்ளார்கள். நாங்களும் அவ்வழியில் தான் வளர்ந்து வருகிறோம்.

கம்யூனிஸ்ட் கட்சியின் பலத்தோடு மின்வாரியத்தில் காலுன்ற முயற்சிக்கும் வாய்ப்போ, ஆளும்கட்சியுடன் கூட்டணி வைத்து கோரிக் கைகளை வென்று பலப்படுத்திடும் வாய்ப்பே எங்களுக்கு (ஐக்கிய சங்கத்திற்கு) கிட்டவில்லை என புலம்பி உள்ளனர். CITU தொழிற்சங்கம் வேறு, கம்யூனிஸ்ட் கட்சி வேறு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இன்றும் கூட எங்களது நிர்வாகிகளில் பலர் திராவிட அரசியலில் ஈடுபாட்டுடன் உள்ளவர்கள் உள்ளனர். CITUவில் உள்ளவர்கள் அனைவரும் கம்யூனிஸ்ட் கட்சியின் தொண்டர்கள் கிடையாது. உங்களுக்கு ஆசை இருந்தால் நீங்களும் உங்கள் அடலேறுகள் விரும்பும் கட்சியில் சேருங்கள்.

அடுத்து ஆளும் கட்சியுடன் கூட்டணி வைத்து கோரிக்கைகளை வெற்றிபெற்று விடுகிறோமா. தமிழகத்தில் யார் ஆட்சியில் இருந்தாலும் எங்களது கோரிக்கை அதாவது தொழிலாளர் நலன் சார்ந்த கோரிக்கையை முன்வைத்து பேச்சுவார்த்தை நடத்துவோம். நிறைவேறவில்லையெனில் போராடுவதை தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்தவர்கள் நாங்கள்.

மேலும் வாரியத் தலைவர் உறுப்பினர் எண்ணிக்கையின் படி பேச்சுவார்த்தைக்கு அழைத்ததில் இவர்களை இரண்டாம் இடத்தி லிருந்து மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டதற்கு யார் தவறான தகவல்களை அளித்தார்கள்? அதற்கும் மத்திய அமைப்பு தான் பொறுப்பா! ஐக்கிய சங்கத்தின் தோழர்களை, நண்பர்களை போராட தெரியாதவர்கள் என எங்கும் மத்திய அமைப்பு குறிப்பிடவில்லை. கீழ் மட்டங்களில் துண்டறிக் கை வெளியிடும் பொழுது, உள்ளூர் பிரச்சனை களோடு செய்தி வெளியிடுவார்கள். தலைமையின் பார்வைக்கு வந்தால் நாங்கள் சுட்டிக்காட்டி சரி செய்வோம், செய்து வருகிறோம் நண்பரே!

ஏன் சமீபத்தில் கூட கேங்மேன் பணி நியமன தீர்ப்பையடுத்து, எங்கள் பொதுச் செயலாளரை, கோவையிலுள்ள தங்களது சங்க நிர்வாகியும் அவரது நண்பரும் கொச்சைப்படுத்தி, செய்தி வெளியிட்டிருந்தார். நாங்கள் அதை பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. எங்களுக்கு விமர்சனத்தை தாங்கும் பக்குவம் உண்டு, அதை ஏற்றுக்கொண்டு, அடுத்த கட்ட நகர்வை நோக்கி பயணிப்போம்.

கடந்த ஊதிய உயர்வில் அனைத்து சங்கஙளும் (மத்திய அமைப்பை தவிர) இடைக்கால நிவாரணம் கோரி 31.01.2018 அன்று மின்துறை அமைச்சரை சந்தித்து கடிதம் கொடுத்த பொழுது ஊதிய உயர்வு ஒப்பந்தம் காலதாமதம் ஆகும். ஆகவே இடைக்கால நிவாரணம் அளிக்கிறோம் என்று அமைச்சர் அறிவிப்பு செய்தார். ஆனால் 16.02.2018-ல் நடைபெற்ற வேலை நிறுத்தம், அதற்கு முன்பு அப்போதிருந்து வாரியத் தலைவர் திரு.சாய்குமார் IAS தொழிற்சங்கங்களிடம் 2.57 % என ஆலோசனை யை தந்து விட்டார். அதை மாற்ற முடியாது என்பதை உணர்ந்து ஏற்பட்ட ஒப்பந்தமே இது என்பது அனைவருக்கும் தெரியும். நாங்கள் அந்த போராட்டத்தில் மட்டுமல்ல தற்போது நடக்கும் போராட்டத்திலும் அனைவரையும் ஈடுபடுத்த வேண்டும், என்ற எண்ணத்திலும் ஒற்றுமையை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்திலும், சில சில கோரிக்கைகளை விட்டுக்கொடுத்து இயக்கங்களில் பங்கேற்கிறோம். ஆம்! அதில் தான் நமக்கு வெற்றி கிடைத்துள்ளது. அந்த வெற்றியை எல்லோரும் சுவைக்க வேண்டும்.

சரி இந்த விமர்சனங்களும், விவாதங்களும் எங்கேயிருந்து துவங்கியது என்று பார்த்தால், 9613 கேங்மேன் பணி நியமன உத்திரவு வெளியாகி அதில் மின் ஊழியர் மத்திய அமைப்பில் ஆயிரக்கணக்கானோர் உறுப்பினராகி வருவதை கண்டு ஏற்பட்ட நிகழ்வின் வெளிப்பாடே!

ஒரு மின்வாரிய தொழிலாளி எந்த சங்கத்தில் உறுப்பினராக இருப்பது என்று முடிவெடுப்பது அவரது உரிமை. சங்கங்கள் தொழிலாளிகளிடம் சந்தா கோருவது அவரவர் சார்ந்த சங்கங்களின் உரிமை.

எனவே இதுவல்ல நமது பிரச்சனை மின் வாரியம் பொதுத்துறையாக பாதுகாத்திடவும், நமது பணியாளர்களின் நலன்களை பாதுகாத் திடவும் இணைந்து போராட வேண்டிய அவசியமும் கடமையும் நம்முன் உள்ளது. அதில் நீங்கள் விரும்பினால் கூட சமூக இடை வெளியுடன் நிச்சயமாக பயணிக்க முடியாது. வெறுப்பு விதைகளை விதைத்து பயனில்லை.

# ஸ்டெர்லைட் ஆலை ஆக்சிஜன் உற்பத்திக்காக திறக்கும் நடவடிக்கை சரியா?

தூத்துக்குடியில் உள்ள வேதாந்தா நிறுவனத்திற்கு சொந்தமான ஸ்டெர்லைட் ஆலை தாமிரம் உற்பத்தி செய்து வந்தது. இது அந்த பகுதியில் சுற்றுசூழலை மாசுப்படுத்தியது. மக்களுக்கு சொல்லென துயரங்களும் உயிர் இழப்புகளும் ஏற்பட்டது.

இதனால் தூத்துக்குடி நகர மக்கள் இந்த ஆலையை மூடச்சொல்லி நீண்ட நெடும் போராட்டம் நடத்தி, போராட்டத்தில் 13 பேர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அதன் பின்பு ஆலையை அரசு மூடி சீல் வைத்தது. வேதாந்தா நிறுவனம் பல்வேறு வழிகளில் முயற்சி எடுத்தும் ஆலையை திறக்க முடியவில்லை.

கொரானா நோய் தொற்று 2-ஆவது அலை வேகமாக பரவிய காரணத்தினால் நாடெங்கிலும் நோயாளிகளுக்கு ஆக்சிஜன் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதை பயன் படுத்தி ஸ்டெர்லைட் ஆலையில் இருந்து ஆக்சிஜனை உற்பத்தி செய்து இலவசமாக வழங்க போகிறோம். அனுமதி தரவேண்டும் என புதிய கோரிக்கையை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். ஆனால் தூத்துக்குடி மக்களும், தமிழக அரசும் ஒப்புக் கொள்ளவில்லை. உச்சநீதிமன்றம் அரசே ஆலையை ஏற்று நடத்தலாம் என யோசனை தெரிவித்தது. இதனையடுத்து நடைபெற்ற அனைத்து கட்சி கூட்டத்தில் தற்போது உள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு நான்கு மாதங்களுக்கு மட்டுமே தற்காலிக அனுமதியளித்து ஆக்சிஜன் உற்பத்தி செய்து தமிழக பயன்பாட்டுக்கு போக வெளி மாநிலங்களுக்கு அளிக்கலாம் என தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

அனைத்து கட்சி கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, அரசே ஸ்டெர்லைட் ஆலையை ஏற்று ஆக்சிஜன் உற்பத்தி செய்ய வேண்டும். தூத்துக்குடி மக்கள் உள்ளடக்கிய கண்காணிப்புக் குழுவும் இருக்க வேண்டும். தற்காலிகமாக மட்டுமே பயன்படுத்தி ஆக்சிஜன் உற்பத்தி நடைபெற வேண்டும் என வலியுறுத்தி உள்ளது. இது தற்போது உள்ள சூழலில் ஆக்சிஜன் தட்டுப்பாட்டால் உயிர் இழப்பு ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கையே.

உச்சநீதிமன்றமும் ஆக்சிஜன் தயாரிப்பதற்கு ஸ்டெர்லைட் ஆலை இயங்க தேசிய சூழலை கருத்தில் கொண்டு அனுமதி அளிப்பதாகவும் இந்த உத்தரவு வேதாந்தா நிறுவனத்திற்கு வருங்காலத்திற்கு ஆதரவாக அமையாது என்றும், இந்த உத்தரவை கொண்டு ஸ்டெர்லைட்டில் தாமிர உற்பத்தி செய்யவோ அதற்காக ஆலையை இயக்கவோ அனுமதியில்லை என தெரிவித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

உச்சநீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் இந்த ஆலை திறப்பதை, துப்பாக்கிச் சூட்டில் இறந்த போன 13 பேர்களின் குடும்பங்களும் பாதிக்கப்பட்ட குடும்பங்களும் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளாது. ஆனாலும் கொடிய நோயால் நமது மக்கள் ஆக்சிஜன் இல்லாமல் இறக்கும் சூழல் ஏற்பட வாய்புள்ளது என்பதை கருத்தில் கொண்டு கனத்த இதயத்துடன் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அரசுகள் நினைத்தால் பெல் உள்ளிட்ட மத்திய அரசு பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து ஆக்சிஜன் உற்பத்தி செய்ய முடியும்.






ராமநாதபுரம் கிளை ஆண்டு பேரவை
24.04.2021 – பரமகுடி





பெரம்பலூர் கிளையில்
கள உதவியாளர்
பயிற்சி வகுப்பு

தோழர் து.ஜானகிராமன்
அவர்களின்
88 வது பிறந்த நாளை
முன்னிட்டு
21.04.2021 அன்று
கோவையில்
ஒப்பந்தம் – பகுதி நேர
ஊழியர்களுக்கு
காய்கறி – மளிகை பொருட்கள்
வழங்கப்பட்டது





43

Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 10.05.2021

# தமிழக சட்டமன்றத்தில் தொழிலாளி வர்க்கத்தின் குரலாய் ஒலிக்க போகும் இடதுசாரி சட்டமன்ற உறுப்பினர்கள்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)



**நாகை மாலி**
கீழ்வேளூர்



**எம்.சின்னத்துரை**
கந்தர்வகோட்டை

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி



**டி.ராமச்சந்திரன்**
தளி



**மாரிமுத்து**
திருத்துறைபூண்டி

Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian